
பிணம் காத்த புதையல்!
லயன் காமிக்ஸ்
க்ரைம் க்விஸ் போட்டிகள் உள்ளே!
ரூ.4-00
ஏஜெண்ட் காரிகன் சாகஸம்!

# ஏஜெண்டுகள் தேவை!

கீழ்கண்ட இடங்களில் நமது லயன் காமிக்ஸ் & முத்து காமிக்ஸ் இதழ்களை ஆர்வமுடன் விற்பனை செய்ய ஏஜெண்டுகள் தேவை!

1) உடுமலைப்பேட்டை
2) ஆனைமலை
3) வால்பாறை
4) சிறுமுகை
5) நெய்வேலி
6) திண்டிவனம்
7) விழுப்புரம்
8) செஞ்சி
9) சின்ன சேலம்
10) ராமேஸ்வரம்
11) மேச்சேரி
12) வாழப்பாடி
13) வத்தலகுண்டு
14) போடி
15) சின்னமானூர்
16) ஆண்டிபட்டி
17) பெரியகுளம்
18) தென்காசி
19) ஆறுமுகநேரி
20) அம்பாசமுத்திரம்
21) கடையநல்லூர்
22) சங்கரன்கோவில்
23) கொளச்சல்
24) களக்காடு
25) திருவள்ளூர்
26) செங்கல்பட்டு
27) வேலூர் (N.A.)
28) வாலாஜாபேட்டை
29) குடவாசல்
30) மன்னார்குடி
31) காரைக்கால்

## விபரங்களுக்குத் தொடர்பு கொள்க:

**பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,**

தபால் பெட்டி எண்: 374, சிவகாசி - 626 123.

போன்: (04560) 20649, 21159.

வாசக நண்பர்களே,

1994 நமக்கு ஒரு land mark year என்று ஏற்கனவே எழுதி யிருந்தேன்... இரண்டு கார்ணங்கள் -

1) நமது 100வது இதழ் வரும் ஆண்டு இது!
2) லயனின் 10வது ஆண்டு மலர் வரயிருக்கும் வருஷமும் இதுவே...

இதை ஒரு memorable year ஆகக் கொண்டாட வேண்டுமென்ற எண்ணத்தில் நமது இதழில் நிறைய improvements பண்ண முயற்சித்துக் கொண்டிருக்கிறோம்.

அட்டைப்படம் நல்ல காகிதத்தில் - 'லேமினேஷ்னோடு' பளபளப் பதை கவனித்திருப்பீர்கள்...

...கதை + கதாநாயகர்கள் விஷயத்தில் நிறைய கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறோம். நீண்ட இடைவெளிக்குப் பிறகு நமது முதல் கதாநாயகியான **"மாடஸ்டி பிளைஸி"** தன் சகா வில்லி கார்வினோடு லயனில் சாகஸம் செய்யக் காத்திருக்கிறார்! தரமான படங்கள் + சுவையான வசனங்களோடு மாடஸ்டி கதைகள் நமது இதழுக்கு மெருகூட்டப் போவது நிச்சயம்! இவர்களது சாகஸம் நமது **"சென்சுவரி ஸ்பெஷலில்"** அதிரடியாக இடம் பெறப் போகின்றது!

அப்புறம் இன்னொரு சூப்பர் நியூஸ்!




கங்காரு தேசத்திலிருந்து அவார்டு வாங்கியதொரு சாகஸக் கதா நாயகரை விரைவில் உங்களுக்கு அறிமுகப்படுத்தவிருக்கிறோம்! **"ஆஸ்திரேலியாவின் நம்பர் ஒன் அட்வென்சர் காமிக்ஸ்"** என்ற விருதை 1993ம் ஆண்டிற்குத் தட்டிச் சென்றுள்ளது "BALLANTYNE"

எனும் தொடர்! 40 வருடங்களுக்கு முந்தைய சூழலில் காடுகளிலும், கரடுமுரடான மலைகளிலும், பாலைவனங்களிலும் சாகஸம் செய்யும் ஒரு காட்டிலாகா அதிகாரியைப் பற்றிய கதை இது! தத்ரூபமான படங்கள்; நிஜ சம்பவங்களின் பின்னணி, விறுவிறுப்பான கதை என்று நிறைய ப்ளஸ் பாய்ண்ட்ஸ் கொண்ட இந்தத் தொடர் விரைவில் நமது லயனில் வரப் போகிறது.

அதுமட்டுமல்ல - 'கோடன் பிரின்ஸ்' கதைகளுக்கு மிக வித்தியாச மான ஸ்டைலில் படம் வரைந்த ஓவியரின் மற்றொரு படைப்பான ஒரு கௌ-பாய் கதைத் தொடரையும் நமது லயனுக்குக் கொண்டு வர ஏற்பாடுகள் செய்து வருகிறோம்! ஓரிரு மாதங்களில் கதைகள் பற்றிய அறிவிப்புகள் வரும்!

1994க்கான விசேஷ அறிவிப்புகள் வரிசையில் **''வாசகர் கடிதம்''** பகுதியில் செய்யவிருக்கும் மாறுதலைப் பற்றியும் சொல்லி விடுகிறேன்! தம் பெயரை அச்சில் பார்க்க வேண்டுமென்ற ஆசையில் மட்டுமே இதழைப் பற்றிய விமர்சனங்களை எழுதியனுப்பும் ரகமல்ல நம் வாசகர்கள் என்பது எனக்குத் தெரியும்! நிஜமாகவே கதையை ரசித்துப் படித்து நீங்கள் அனுப்பும் விமர்சனங்களை இடப்பற்றாக்குறை காரணத்தால் முழுவதுமாய் வெளியிட முடிவதில்லை. இனி அடுத்த இதழ் முதல் **''வாசகர் கடிதம்''** பகுதிக்கு கூடுதலாக ஒரு பக்கம் ஒதுக்கப்படும். அந்த எக்ஸ்ட்ரா பக்கத்தில் **''மாதம் ஒரு வாசகர்''** என்ற தலைப்பில் கதையைப் பற்றிய சிறப்பான விமர்சனத்தையும், வாசகரைப் பற்றிய விபரங்களையும் வெளியிடப் போகிறோம்! Photo அனுப்பினால் அதுவும் பிரசுரிக்கப்படும்.

ஆகையால் இனி கதைகளைப் பற்றிய விமர்சனங்களை அனுப்பும் போது - **''மாதம் ஒரு வாசகர்''** கூப்பனையும் (71.ம் பக்கத்தில் உள்ளது) பூர்த்தி செய்து உங்கள் போட்டோவோடு அனுப்புங்கள்! சிறந்த விமர்சனம் (பாராட்டாக இருந்தாலும் சரி, மண்டையில் குட்டாக இருந்தாலும் சரி) அடுத்து வரும் இதழில் வெளிவரும்.

**''சென்சுவரி ஸ்பெஷல்''** வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன! ''ஜானி நீரோ'' கதைக்குப் பதிலாக மாடஸ்டி பிளைஸியும்; புதியதொரு 36 பக்க ரிப் கிர்பி கதையும் சென்சுவரி ஸ்பெஷலில் எக்ஸ்ட்ராவாக இடம் பெறவிருக்கிறது! தவறாமல் இதழை வாங்க ஏற்பாடு செய்திடுங்கள்!

மீண்டும்
அடுத்த
இதழில்
சந்திப்போம்!



அன்புடன்,

# பிணம் காத்த புதையல்!


F.B.I. ஏஜெண்ட்
பிலிப் காரிகன்
செனட்டர்
கேபிள் க்ரோக்கர்
அப்னர்
டெக்ஸ்டர்
(காரிகனின் தந்தை)
செனட்டர்
காட்மன் க்ரோக்கர்
(கேபிளின் தந்தை)


F.B.I. தலைமையகம் அது -
ப்ளாக் மெயில் அச் சுறுத்தல் வந்தபோது செனட்டர் கேபிள் க்ரோக்கர் துணிச்சலாக F.B.I. க்குப் போனார்..
மிஸ்டர் வில்லியம்ஸ்..! FBI யின் உதவியை நாட, வகுக்கப்பட்ட வழிமுறையில் வராமல் நான்..
ஜனாதிபதியின் சிபாரிசு கடிதத்தோடு நேராக என்னிடம் வர எத்தனை பேருக்கு சாத்தியம்... செனட்டர்!
பத்திரிக்கைகளில் கொட்டை எழுத்தில் ஒரு மனிதனின் நேர்மை கேள்விக் குறியாக்கப் படுவது கூட ஒரு வகை யில் ப்ளாக் மெயில்தான் - இல்லையா?
அரசியல் ஒரு ஆபத் தான 'வியாபாரம்'..! என்னதான் நடந்தது - விபரமாக சொல்லுங்கள்!
முதலில் ஒரு போன் கால்... அதைத் தொடர்ந்து ஒரு மொட்டைக் கடிதம்..
'உன் தந்தையை பலி கொண்ட 'ஆயுதம்' இன்னமும் என் வசம் இருக்கிறது.. உன்னையும் பலி கொள்வேன்' என்று!
..அதுசரி - உங்களுடைய தந்தையை 50 ஆண்டுகளுக்கு முன் பலி கொண்ட மோசடி எப்படி இப்போது உங்களை பாதிக்க முடியும்?
அரசியல் மோசடி என்பது வெடிகுண்டை விட மோசமான தாயிற்றே!
..அப்படி என்னதான் வைத்திருக் கிறார்களாம்?
என் தந்தையை தற்கொலை செய்து கொள்ளத் தூண்டிய நெருக்கடியை ஏற்படுத்திய விவகாரம் அது.



தவறான அணியோடு உறவு வைத்துக் கொண்டிருந்தார் என் தந்தை. இரண்டாவது உலக மகா யுத்தம் உருப்பெற்றதும்தான் தவறு புரிந்தது.. தன்னைத்தானே தண் டித்துக் கொண்டுவிட்டார்...
தந்தை செய்த தவறுக்கு மகன் எப்படி பொறுப் பாளியாக முடியும்? நாங்கள் இருக்கிறோம் - தைரியமாக இருங்கள்.
உற்சாகம் வழிகிறது உங்கள் முகத்தில்..! வழக்கை ஏற்றுக் கொண்டுவிட்டார் களா.. பாஸ்?
சிபாரிசு கடிதம் கொடுத்தவர் என்ன சாமானியரா..? வா.. போய் அவருக்கு நன்றி தெரிவிப்போம்!
அவருடைய பொன்னான நேரத்தை நான் வீணடிக்க விரும்பவில்லை.. மெரிலின்! F.B.I. க்கு சிபாரிசு கடிதம் கொடுத்ததற்காக என் மனமார்ந்த நன்றியை என் சார்பில் நீ தெரிவித்துவிடு!
ஐயையோ.. உங்களை நான் இப்படி திருப்பி அனுப்பினால் என்னை அவர் கொன்று விடுவார்.. உள்ளே போங்கள்!
உடனே வழக்கை எடுத்துக் கொண்டார் கள் ஸார்.. எல்லாம் உங்களுடைய சிபாரிசு கடிதத்தின் மகிமை - நன்றி ஸார்!
நாணயமானதொரு செனட்டரை ப்ளாக் மெயிலுக்கு பலி கொடுக்க எனக்கு சம்மதம் இல்லை என்பதால்தான்.. கேபிள்!
சீஃப்! செனட்டர் க்ரோக் கரின் தந்தை சம்பந்தப் பட்ட ஆவணங்களை ஆராய்ந்துவிட்டேன்..
..அந்த வழக்கை புலனாய்வு செய்த
ஏஜெண்டின் பெயர் 'டெக்ஸ்டர்!'
'டெக்ஸ்டர்!'.. வெரிகுட்.. வெரிகுட்.. வெரிகுட்!



ஏன்.. அவரை தெரியுமா ஸார் உங்களுக்கு?
அப்படித்தான்..! அப்போது அந்தப் புனை பெயரில் பணியாற்றிய ஏஜெண்டின் மகன்தான் நம்முடன் இன்று இருக்கும் பிலிப் காரிகன்!
செனட்டர் காட்மன் க்ரோக்கரின் வழக்கை 'டெக்ஸ்டர்' புலனாய்வு செய்தார்.. அவருடைய மகன் செனட்டர் கேபிள் க்ரோக்கரின் பிரச்சனையை டெக்ஸ்டரின் மகனிடம் ஒப்படைக்கலாம் என்றிருக்கிறேன்.
ஓ.. அப்படிப் போகிறதா சமாச்சாரம்!
என்ன ஒரு அதிசயமான பொருத்தம்!
காரிகனுக்கு தகவல் அனுப்ப வேண்டும்!
ஓ.. அதோ அவரே வந்து விட்டார்!
நூறு வயது உனக்கு.. காரிகன்!
கொடுத்த வழக்கை முடித்துவிட்டேன்.. ஓய்வெடுக்க, சொல்லிக் கொண்டு போக வந்தேன்!
உன் தந்தை விட்டுச் சென்ற பணியை உடனடியாக முடிக்கும் பொறுப்பு உனக்கு காத்திருக்கிறது காரிகன்..
என் தந்தை எதையுமே பாதியில் விட்டு சென்றதில்லை!
பாதியில் விட்டுவிடுமாறு வற்புறுத்தப்பட்டார்.. அதனால்தான் அவர் F.B.I. விட்டு வெளியேற நேர்ந்தது.



உன் தந்தை கடைசியாக ஈடுபட்டிருந்த வழக்கு, செனட்டர் காட்மன் க்ரூக்கர் தற்கொலை செய்து கொண்டதை யடுத்து தேக்கம் கண்டது...
வழக்கை அப்படியே கைவிடுமாறு மேலிடம் வற்புறுத்தியது. அவர் ஒப்புக் கொள்ள வில்லை... சீட்டைக் கிழித்து அனுப்பி விட்டார்கள்!
பிறகென்ன.. மீண்டும் ஏன் அதை கிளறு கிறீர்கள்?
கிளறுவது நாங்கள் அல்ல.. - விதி..! க்ரோக் கரின் மகனும் அதே முறையில் இப்போது ப்ளாக் மெயில் செய்யப் படுகிறார்..
50 ஆண்டுகளுக்கு முன் தந்தை மீது விழுந்த பழி இப்போது மகனையும் பாதிக்கும் நிலை...
ப்ளாக் மெயில் எனக்கு கொஞ்சமும் பிடிக்காத சங்கதி... வழக்கை எடுத்துக் கொள்கிறேன்.. கேள்விப்பட்டால் அப்பாவும் சந்தோஷப் படுவார்!
காட்மன் க்ரோக்கரின் வழக்கு பற்றிய விபரங்-கள் டாம் வசம் உள்ளன. அவை சரிதானா என்று உன் தந்தையிடம் கேட்டு உறுதி செய்து கொள்.. ஞாபகம் வைத் திருப்பார் என்று நினைக்கிறேன்.
நிச்சயமாக! இந்தப் பழங்கதை எந்த வகை யில் செனட்டர் கேபிள் க்ரோக்கரை தற்சமயம் பாதிக்கின்றது?
அவருடைய தொகுதியில் மறுதேர்தல் வரப்போகிறது! , தந்தை மீதுள்ள பழி மகன் மீது கறை ஏற்படுத்தலாம்... அவருடைய எதிர் காலமே கேள்விக் குறி யாகிப் போகலாம்!
அப்படி என்ன சான்றுகள் எதிரிகள் வசம் இருக் கிறதாம்?
கேபிளிடம் போய் கேள்..! விபரமாக சொல்வார்!
சொன்னால் சரி!



செனட்டர் கேபிளின் அலுவல் அறை..! அவரும் அவருடைய வலது கை போன்ற அந்தரங்க காரியதரிசி அப்னரும்
உங்களுடைய தந்தையை காப்பாற்ற முடியாது போன F.B.I. உங்களை எப்படி காப் பாற்றப் போகிறதோ..? உங்களுக்கோ வயதாகி விட்டது.. பேசாமல் அரசியலுக்கு முழுக்குப் போட்டுவிட்டு அக்கடா என்று இருந்து விடுங்களேன்.
66 வயது ஒரு வயதா? 30 வயதில் இருப்பவர் கள் எத்தனையோ பேர் தளர்ந்து போயிருக் கிறார்கள். நான் திடமாக, உறுதியோடு, ஒரு இலட்சியத்தோடு இருக்கிறேன்.
நான் பிரஸிடெண்ட் ஆக வேண்டும்... பழைய குப்பைகளை குழி தோண்டி புதைக்கா விட்டால் அது சாத்திய மாகாமல் போகலாம்!
F.B.I. யின் திறமையான ஏஜெண்ட் நம் எதிரியை யும் அவன் வசம் உள்ள தடயங்களையும் கண்டு பிடிக்கட்டும்.. எதிராளி யோடு அவனையும் தீர்த்துக்கட்டிவிட்டு..
..தடயங்களையும் கொளுத்திவிடுவோம்! பிறகு யார் நம்மை என்ன செய்துவிட முடியும்?
அப்படியும் செய்வீர்களா.. பாஸ்?
வேறு வழி? அரசியலில் இது சாணக்கியம்!
இதை எல்லாம் என்னிடம் சொல்லி விட்டீர்களே - என் மீது அவ்வளவு நம்பிக்கையா?
செல்வாக்கோடு வாழ வேண்டும் என்ற ஆசை உனக்கும் தானே இருக் கிறது... பிரஸிடெண்ட் டின் வலது கை என்றால் அதிகாரத்துக்கு சொல்ல வேண்டுமா? அதிர்ஷ் டம் நமக்காக காத்துக் கிடக்கிறது தம்பி..!
அங்கே -
சரி.. போய் க்ரோக்கரை சந்திக்கிறேன்!
அரசியலில் மரியாதைக் குரிய பிரமுகர்களில் அவரும் ஒருவர் என்பதை ஞாபகம் வைத்துக்கொள் காரிகன்.


ஸார்.. FBI யிலிருந்து காரிகன் என்று ஒருவர் வந்திருக்கிறார் - உங்களைப் பார்க்க!
ஓ.. வில்லியம்ஸ் உடனடியாக காரியத்தில் இறங்கிவிட்டார்! ஒரு இரண்டு நிமிஷம் அவகாசம் கொடு எனக்கு.. அப்புறமாக ஆளை உள்ளே அனுப்பு கரீன்!
அப்னர்.. நீ கிளம்பு.. உன்னை அவன் பார்த்து விடலாகாது.. அப்புறமாக டின்னி ஹோட்டலில் உன்னை சந்திக்கிறேன்.
வா.. காரிகன்.. வந்து உட்கார்!
அந்த ப்ளாக் மெயில் விவகாரம் பற்றிய விபரங்களை சொல்லுங்கள் ஸார்
''உன் தந்தையை பலி கொண்ட 'ஆயுதம்' இன்னமும் என் வசம் இருக்கிறது.. உன்னையும் பலி கொள்வேன்' என்று சொன்னான்.
அது என்னவென்று யூகிக்கக் கூட முடிய வில்லையா?
..அந்த போன் காலை நீங்கள் பதிவு செய்ய வில்லையா?
இல்லை!.. எனக்குத் தோன்றவில்லை!.. குரலை மாற்றிப் பேசி னான்.. பதிவு செய்திருந் தாலும் பலனிருக்காது.
எங்களுடைய ஆய்வு கூடத்தின் செயல் திறனை நீங்கள் அறிய மாட்டீர்கள்.. ண்டும் போன் செயவான் - பதிவு செய்யத் தவறாதீர்கள்.
'குரல் பதிவு' நமக்கு ஒரு தடயமாக பயன்படும்!


உங்கள் தந்தை இழைத்த குற்றம்தான் என்ன?
இரண்டாவது உலக மகா யுத்தத்திற்கு முன்னோடியாக நாடுகள் இரு வேறு அணிகளாக பிரிந்து கொண்டிருநத வேளையில் தவறான பக்கம் துணை போய் விட்டார்..
உங்கள் தந்தை செய்த தப்புக்கு நீங்கள் எப்படி பொறுப்பாளியாக முடியும்... அதுவும் தண்டனையாக தன்னைத் தானே அவர் அழித்துக் கொண்ட பிறகு?
தந்தை - மகன் உறவை காட்டி என்னை சந்திக்கு இழுக்கும் முயற்சி - தேர்தல் நெருங்கி வருகிறதல்லவா? நான் எப்படியாவது ஜெயித்துவிட வேண்டும் என்பது 'பெரியவரின் விருப்பம்..'
போன்.. ஸார் 'பிளாக் மெயில்' ஆசாமிகள்தான்!
போனை கையில் எடுத்தார்
உரையாடலை நான் பதிவு செய்கிறேன்!
ஆனால் மறுமுனையில் பேசியவன் லேசுப்பட்ட வனில்லை.. சிறு தந்திரத் தின் மூலம் குரலை அடையாளம் தெரியா மல் செய்துவிட்டான்..
டிட்டிட்டிட
சீக்கிரம் ஒரு நல்ல முடிவுக்கு வாருங்கள் செனட்டர்.. அதுதான் உங்களுக்கு நல்லது!
அவனுடைய குரல் இதில் இருக்கிறது... ஆனால் இடையூறாக வந்த இரைச்சலும் பதி வாகியிருக்கிறது!
ஆய்வு கூடம் ஏதாவது கண்டு பிடிக்க முடிகிறதா என்று பார்ப்போம்



நபர் இன்னார் என்று இதை வைத்து கண்டு பிடித்து விட முடியுமா என்ன?
முயன்றுதான் பார்ப்போமே!
அலுவலகத்திற்குத் தானே திரும்பிப் போகிறாய்? கார் நிற்கும் இடம் வரை நானும் உன்னோடு நடந்து வருகிறேனே!
ஓ...! ஆரோக்கியத்தில் ரொம்ப அக்கறை காட்டக் கூடியவர் போலிருக்கிறது!
66 வயதில் எவன் இப்படி ட்ரிம்மாக இருக்கிறான் - சொல்?
சென்று வா.. காரிகன்! நடப்புகளை அவ்வப் போது எனக்கு நீ சொல்ல வேண்டும்!
நீங்களும் புதிய தகவல் ஏதும் இருந்தால் சீஃப் புக்கு சொல்ல மறந்து விடாதீர்கள்..!
இனி நான் போய் அப்னரோடு சேர்ந்து கொள்ளலாம்!
லேட்டாகி விட்டது.. அப்!
பெரிய மனிதர்களாக வேண்டும் என்ற ஆசை நமக்கு இருக்கிற தல்லவா.. பின்னே ஏன்டா இப்படி கண்மண் தெரியாமல் குடித்துக் கும்மாளம் போடுகிறாய்?
ஏய்ய்.. கேபிள் - எனக்கே புத்தி சொல்ல வந்து விட்டாயா?


என்னடா மரியாதை குறைகிறது..! எனக்கு நீ, உனக்கு நான் வேண்டும் - என் தேவைக்கு ஏற்ப! உன்னை வைக்க வேண்டிய இடத்தில் வைக்க எனக்குத்...
ஆவ்வ்! என் கை போச்சு.. ஆல்ரைட்
கேபிள்..! ஓ.. ஸாரி.. செனட்டர்..
ஓ.. திரும்பி வந்து விட்டாயா! அந்த நெஞ் சுறுதி படைத்த மனிதரைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?
ஆமாம்... இரும்பு மனிதர்தான் நானாக இருந்தால் அவரை ப்ளாக் மெயில் செய்ய நினைத்திருக்கவே மாட்டேன்!
ப்ளாக் மெயில் பேர்வழி யின் குரல் இதில் பதிவாகியிருக்கிறதா? நம் ஆய்வுக் கூடம் உருப்படியாக எதையாவது கண்டு பிடிக்கக் கூடும்.
கண்டு பிடிப்பை என் தந்தை முகவரிக்கு மேல் விலாசமிட்டு அனுப்பி வையுங்கள். நான் இப்போதே கிளம்பிச் சென்று பழைய சம்பவம் பற்றி அவருடைய நினைவில் உள்ள தகவல்களை கேட்டறியப் போகிறேன்!
அதையடுத்து
எப்போதும் பயணத் திற்கு தயாராக இருக்கும் பெட்டியை எடுத்துக் கொண்டா யிற்று - கிளம்ப வேண்டியதுதான்!
மேலதிகாரிகள் வேண்டுமானால் பிடியை மறந்து போ யிருக்கலாம்.. ஆனால் அப்பாவின் மூளையில் பதிவாகியிருக்கும் தகவல்களை அவர் நிச்சயம் மறந்துவிட்டிருக்க மாட்டார்..


FBI அலுவலகத்தில் இருக்கிறான் காரிகன்.. அவனை நீ பின் தொடர வேண்டும்!
அவனை உனக்கு அடையாளம் தெரியாதே?
நாம் பிரிந்த போது, நின்று அவனை கவனித்து விட்டுத்தான் கிளம்பினேன்!
சற்றைக் கெல்லாம் -
பின் தொடர்வது என்பது போரடிக்கிற விவகாரம்.. எப்போது வெளியேறு வானோ?
ஆங்.. அதோ வருகிறான்!
பாவி.. கால் நடையாகவே கிளம்பி விட்டானே.. நடப்பது என்பது எனக்கு பிடிக்காத சங்கதி
கஞ்சன் போலி ருக்கிறது.. சுரங்க ரயிலில் ஏறச் செல்கிறான்
விடாமல் பின் தொடர்ந்தான் அப்னர்..



TAXI
டிரைவர்..
..தெரியுமே - அந்தக் காரை பின் தொடர வேண்டும்!
காரிகனின் டாக்ஸி நிற்கிறது..
கொஞ்சம் பொறுப்பா..
உங்க ளிஷ்டம்.. யாரவன்? ஒற்றனா?
சரியாக யூகித்து விட்டாயே..! அதோ கிளம்பி விட்டான்..
கோட்டை விட்டு விடாதே!
விட மாட்டேன்! எனக்கு ஒற்றர்களை அறவே பிடிக்காது
அப்னர் காரிகனை பின் தொடர்ந்தான்.
நிறுத்து.. டிரைவர்!
விமான நிலையம் என்று சொன்னீர்களே.. ஓ.. எதையாவது எடுத்து வர மறந்து விட்டீர்களா?


பின் தொடர்வது யார், எதற்காக என்று இப்போது தெரிந்து விடும்
ஓ.கே.. உன் நோக்கம் தான் என்ன?
எதிரியை லேசாக நினைத்து விட்ட தவறு புரிந்தது காரிகனுக்கு
இதுதான் - புரிகிறதா?
சத்
விஷ்



அதிரடியாக தாக்கப்பட்ட காரிகன் நிலை குலைந்து சரிந்து புரண்டார்..
விஷ்!
துப்பாக்கியை கையில் எடுத்துக் கொண்டு அவர் பாய்ச்சலாக எழுந்தபோது -
"எதிரி எட்டாத தொலைவில் ஓடி மறைந்து விட்டான்.."
ஏய்.. நில் - இல்லையேல்..
டுமீல்!
ஊஊய்ப்ப்.. அ..ப்..பா -
வழிப்பறி திருடனா..? இல்லை.. செனட்டர் விவகாரத் தோடு சம்பந் தப்பட்டவனா?
விஷயத்தை சீஃப் காதில் போட்டு வைக்கிறேன்
செனட்டர் அல்லது FBI அலுவலகத்தில் ஒற்றனே, ஒட்டுக் கேட்கும் கருவியோ இருக்கக் கூடும்!
இருந்தால் கண்டுபிடித்து அகற்றியாக வேண்டும்!
அப்னரும் அதே ரீதியில் செயல் பட்டான்..
செனட்டர்.. காரிகன் என்னை கண்டு கொண்டான்.. எப்படி இது சாத்தியம் என்று அவன்..
..கவலைப்படாதே.. என் அறையை அவர் கள் அலசும்போது ஒரு ஒற்றுக் கருவி இருக்கும்!


இதோ.. இருக் கிறது - சீஃப்!
ஒற்றுக் கருவி - உங்கள் அலு வலகத்தில் உங்களுக்கே தெரியாமல்!
செனட்டரே தன் அறையில் பொருத்திய ஒட்டுக் கேட்கும் கருவி கண்டு பிடிக்கப்பட்டது!
நான் சர்வ ஜாக் கிரதையாக இருந்தும் எப்படி இது -
நாம் இதுவரை மேற் கொண்டுள்ள நட வடிக்கைகள் எதிரி களுக்கு தெரிந்து போயிருக்கிறது.
நாம் என்ன செய்யப் போகிறோம்?
திட்டமிட்டபடி நடக்கும்.. காரிகனை உஷார் படுத்துவோம் - மிச்சத்தை அவன் பார்த்துக் கொள்வான்.
சற்றைக்கெல்லாம் -
அப்.. காரிகனை நீ பின் தொடர்வது தெரிந்து விட்டது அவர்களுக்கு.. நீயா - அவனா என்பது தான் இப்போது உள்ள சவால்.. யார் மீது நான் பந்தயம் கட்ட...?
இதில் போட்டியே இல்லை.. செனட்டர்! அவனை நான் சுலப மாக வீழ்த்திவிடுவேன்.. நம்பிக்கை இருக்கிறது!
காரிகன் ஏர்போட்டுக்கு சென்றார் -
சரியான எமன்.. ஏமாற் றிவிட்டுப் போய் விட்டானே
மீண்டும் வருவானோ?
டிக்கட் ஏஜெண்டிடம் போனார்..
இந்தாருங்கள் ஸார்.. டிக்கட்..
ஒரு மணி நேரத்தில் கிளம்பும்!



இன்னமும் யாரோ என்னை பின் தொடர்வதான உறுத்தல்
அவன் முகத்தை மறைத்துக் கொண்டு விட்டதால் இன்னார் என்று அடையாளம் தெரியாது.
திரும்பி வருவேன் என்று பயல் உஷாராக இருக்கிறான்.. ஓ.கே. வேறு உபாயத்தை கடைப்பிடிக்கலாம்.
ஓ.கே..
ஸார் நீங்கள் ஃப்ளைட் 504 பயணி என்றால் போய் ஏறிக்கொள் ளுங்கள்.
சந்தேகப்படும் படியாக அக்கம் பக்கத்தில் யாரும் தென்பட வில்லை
மேடம்.. செனட் புலனுய்வுத்துறை ஆள் நான்.. பிலிப் காரிகன் என்றொரு நபர் எந்த ஃப்ளைட்டுக்கு டிக்கட் வாங்கியிருக்கிறார் என்று தெரிய வேண்டும்!
ஃப்ளைட் 504 ஸார்!
அடேய்.. காரிகன்.. நீ உலகின் எந்த மூலைக்குப் போனுலும் விடாமல் துரத்தி வருவேனடா..
செனட்டர் க்ரோக்கரா..? அப்னர் பேசுகிறேன்..! பயல் படு எச்சரிக்கையாக இருக் கிறான்.. நெருங்க முடியவில்லை.
ம்ம்.. F.B.I. யில் விசாரித்து சொல் லட்டுமா?



அவசியமில்லை ஸார்... டிக்கட் ஏஜெண்டிடம் கேட்டுத் தெரிந்து கொண்டுவிட்டேன்.
உன்னை பார்த்தால் உஷாராகி விடுவான் என்றால் வேறு ஆளை அனுப்பட்டுமா?
வேண்டாம் என் முகத்தை அவன் பார்த் திருக்க வாய்ப் பில்லை ஸார்!
நம் காரியம் கைகூடி யதும் அவனை தீர்த்துக் கட்டப்போகிறோம் என்றால் மூன்றாவது நபருக்கு இதில் இடமே இருக்கலாகாது..
நீ சொல்வதும் சரிதான்..
புதையுண்டு போனதொரு கேஸை தட்டி எழுப்ப தன் தந்தையின் இருப்பிடம் நோக்கிப் போய்க் கொண்டிருந்தார் காரிகன்!
அவனை நான் கலவரப் படுத்தி துரத்தியடித் திருக்கக் கூடாது.. எதிரியை கண்ணெதிரே வைத்துக் கொள்வது தான் விவேகம்!
டாடி பழைய சம்பவங்களை ஞாபகம் வைத் திருப்பாரா?
ஜாடிக்கு ஏற்ற மூடி - முறி யடிக்கவே முடியாத ஜோடி நாம்.. செனட்டர்!
கமான் அப்..! ஒரு வாடகை ப்ளேனை ஏற்பாடு செய்திருக் கிறேன்... காரிகனை முந்திக் கொண்டு நாம் அங்கே போய் சேர்ந்து விடலாம்!
காரிகனின் விமானம் அங்கே வந்து சேருவதற் குள் நீங்கள் அங்கே ஒரு குட்டித் தூக்கமே போட்டு விடலாம்.. செனட்டர்!


ஸாமின் திறமை மீது நம்பிக்கை வை அப்! சாதித்துக் காட்டுவான்!
ப்ர்ர்..ப்.. ப்ர்..ர்ர்.. ஏய்ய்.. நம்மை நேரே எமலோகத்துக் கொண்டு போய் சேர்க் காமலிருந்தால் சரி..!
தொலைதூர தென் மேற்கு பகுதிக்கு காரிகன் பயணம் செய்வதன் நோக்கம் என்ன... செனட்டர்?
50 வருடங்களுக்கு முன் என் தந்தை சம்பந்தப் பட்ட அந்த விவகாரம் முளை விட்டது அங்கே தான்.. அது சம்பந்தமாக காரிகனுக்கு ஏதோ தெரிந்திருக்கிறது.. ஆனால் அதை அவன் என்னிடம் சொல்ல வில்லை.
அங்கே -
WEST AME
அப்பாவைப் பற்றி நான் செனட்டர் க்ரோக்கரிடம் சொல்லி யிருக்கலாமோ?
இல்லை... என் உள்ளுணர்வு ஏனோ 'அந்த அரசியல்வாதியை நம்பாதே' என்று எச்சரித்துக் கொண்டேயிருக்கிறது!
காரிகன் ஒருவேளை உன்னை பார்த்திருந்தால்.. உன் முகத்தோற்றத்தை மாற்ற சில சாமான்கள் கொண்டு வந்திருக்கிறேன்.
பைலட் சந்தேகப்பட மாட்டானே?
உன் அளவுக்கு நம்பிக்கைக் குரியவன் இந்த ஸாம் - புரிந்து கொள்



க்ரோக்கர் விவகாரம் ஏனே நெஞ்சில் உறுத்தலை ஏற் படுத்துகிறது.. - என்ன அது..?
காரிகன் பயணம் செய்யும் ஜெட் அதுதான் செனட்டர்.. இதோ.. நாம் முந்திக் கொண்டு விட்டோம்
போனஸ் நிச்சயம்.. ஸாம்!
போனவுடன் காரிகன் வந்து சேருவதற்குள் அவனை பின் தொடர வசதியாக ஒரு வாடகை காரை அமர்த்திக் கொள்ள வேண்டும்.
என்னை ஒரு பயல் மிஞ்ச முடியாது அப்னர்!
எதற்காக இப்படி உள் அர்த்தம் வைத்து பேசு கிறீர்கள்.. வெளிப் படையாக பேச வேண்டியதுதானே?
தீர்க்கதரிசன சிந்தனை வேண்டும் என்று சொல்ல வந்தேன் - நீ ஏன் கோபித்துக் கொள்கிறாய்?
என்னை கையாலா காதவன் என்று குறிப் பிடுகிறீர்களோ என்றெண்ணி கோபப்பட்டு விட்டேன்!
அதாவது சூழ்ச்சித் திட்டங்களை!
நோ.. நோ.. உன்னிடம் துடிப்பு இருக்கிறது. நான் உன் வயதில் எப்படி இருந்தேனே அப்படி இருக்கிறாய் இன்று நீ... ஆனால் காலம் சிறப்பாக திட்டமிட எனக்கு அனுபவத்தை வழங்கியிருக்கிறது..


என் முகத்துக்கு எதிரே.. அதுவும் நீ - ஊஹூம்.. இன்னொரு முறை இதை சொன்னாயோ.. தெரியும் சேதி.
யெ..யெஸ்.. ஸா..ஸார்!
காரிகனின் விமானம் தரையிறங்கியது..
எங்களை முந்திக் கொண்டு வந்த அந்த ஜெட்டில் யார் வந்திருப்பார்கள்!
சௌத் வெஸ்ட் டெர்மினலில் ஒரு காரை வாடகைக்கு எடுத்துக் கொண்டார் காரிகன்.
ஆகா... நீண்ட இடைவெளிக்குப் பின் சொந்த ஜனங்களை சந்திக்கப் போகிறேன்!
காரிகனைப் பின்தொடர தயாராக இருந்தனர் -
வேறு எந்த போக்குவரத்தும் இல்லை.. நெருக்கமாக பின்தொடர முடியாது... அதற்காக கோட்டைவிட்டு விடாதே!



வீட்டில் உங்களை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக் கிறார்கள்.. காரிகன்
நீ வந்து கொண்டிருப் பதாக இப் போதே போனில் சொல்லி விடுகிறோம்!
உங்களை அப்புறமாக வந்து சந்திக்கிறேன் - நண்பர்களே!
இன்னும் வேறு யாரோ வருகிறார்கள்!
ஒருவேளை காரிகனை இரகசியமாக பின் தொடரு கிறார்களோ?
காரிகனின் கார் அங்கே திரும்புகிறது பாருங்கள்
அது பண்ணைக்கு சொந்தமான தனியார் சாலை.. தலையை குனிந்து கொண்டு உச்ச வேகத்தில் விடு!
அங்கே நிற்பவர் களுக்கு காரிகனை தெரியும் - எனவே, அவர்கள் நம்மை அடையாளம் கண்டு கொள்ளலாகாது!
இப்போது பாருங்கள்..
அவர்களுடைய நட வடிக்கை சந்தேகப்படும் படியாக இருக்கிறது - காரிகனுக்கு தெரிவிப் போமா?
அவசியமில்லை.. காரிகன் இங்கே வரப் போவது வேறு யாருக்கும் தெரிந்திராது.. அப்படி யிருக்கையில் -


வீட்டில்
மம்மி.. அன்றைக்குப் பார்த்த மாதிரியே இருக்கிறீர்கள்!
எத்தனை நாள் தங்குவாய்.. பிலிப்?
முன்பு நான் வந்தால் எப்படி திரும்பி ஓடு வேனே அப்படித்தான் இன்றைக்கும் அவன்..
காட்மன் க்ரோக்கரைப் பற்றி என்னிடமிருந்து கேட்டறிந்து கொண்டதும் கிளம்பிவிடுவான்.
டாடி சொல்கிற மாதிரி தானா பிலிப்? தங்காமல் கிளம்பிப் போய் விடுவாயா?
மம்மி.. ப்ளாக் மெயில் அன்று காட்மனின் உயிரை குடித்து விட்டது. இன்று அவருடைய மகனுடைய எதிர் காலத்தை அல்லது உயிரையே பலி கொள்ள நினைக்கிறது..
வா.. காரிகன்! குதிரையில் போய்க் கொண்டே இதைப் பற்றி பேசுவோமே!
உங்கள் வேகத்திற்கு என்னால் ஈடு கொடுக்க முடியுமா?
ஏன் வெளியில் பேசுவோம் என்று அழைத்து வந்துவிட்டீர்கள் டாடி?
காட்மன்.. பாவம் - சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.. மேலிடம் சொன்னது - அந்த வழக்கை அப்படியே கைவிட்டு விடுமாறு.. எனக்கு துளியும் சம்மதமில்லை.


காட்மனை பலி வாங்கிய சங்கதி இப்போதும் தன் வசம் இருப்பதாக ப்ளாக் மெயிலர் சொல்லி யிருக்கிறான்.
அது என்னவென்று நான் கண்டுபிடிக்க வில்லை - அதற்கு நான் அனுமதிக்கப் படவில்லை.
"காட்மனின் பிரச்னை முளைவிட்டது 1940க்கு முன்.. உலக நாடுகள் இருவேறு அணிகளாக பிரிந்து ஒரு குழப்ப மான சூழ்நிலை உரு வாகி வந்த நேரம்.."
"ஒரு பயங்கர யுத்தம் வரப் போகிறது என்று எல்லோருக்கும் தெரியும். இரு பக்கமும் இருந்த வலிய சக்திகள் நம் நாட்டை தங்கள் பக்கம் இழுக்க பிரயத்தனப்பட்டன."
"இந்த நிலையில், ஒரு சாராரிடமிருந்து பெரும் தொகையை ரொக்க மாக பெற்றுக் கொண்டு, அமெரிக்காவை அவர் கள் பக்கம் சாய வைக்க முயற்சிகளை மேற் கொண்டிருப்பதாக க்ரோக்கர் மீது புகார் எழுந்தது. அது சட்ட விரோதமான காரியம்."
"..அதில் சட்ட விரோதம் ஏதுமில்லை.."


"அந்த புகாரை ஆராயுமாறு F.B.I. க்கு உத்தரவு வந்தது.
அந்த பொறுப்பு என்னிடம் விடப்பட்டது."
பெரும் தொகை கைமாறியது நிஜம்தான் என்று சீக்கிரமே தெரிய வந்தது.. அதைத் தொடர்ந்து தேச விரோத சக்திகளின் பங்கும் வெளி வந்தது..
"அந்தக் கும்பலின் கோட்டை என கருதப் பட்ட கீழ்த்திசை பகுதிக்கு பணம் போவதாக தகவல் எட்டியது.. ராட்சஸ அளவிலான டிரங்க் பெட்டியை நான் பின் தொடர்ந்தேன் - உள்ளே இருப்பது என்ன என்று தெரிந்து கொள்ள!
ஆனால் நான் அந்த உண்மையை தெரிந்து கொள்ளவே முடிய வில்லை."
"இரயில் கார்டு கூட ஒத்தாசை செய்தார்.. பெட்டியை கைப் பற்றி பூட்டை உடைத்து திறந்தோம்.."
"..அதே கணத் தில் இரயிலின் கூறை தகர்ந்து விழுந்தது -"


"..பலத்த வெடி யோசையை அடுத்து!"
பூம்!
"தலைக்கு மேலே விமானங்கள்.. குண்டுகளை பொழிந்து விட்டுப் போயின."
"கார்டு படுமோசமாக காயமடைந்துவிட்டார். அவரை தூக்கி தோளில் போட்டுக் கொண்டு வெளியேறினேன்."
"புதரினுள் நாங்கள் பதுங்கிக் கொண்டோம்.. இரயில் எஞ்சினையும், தண்டவாளத்தையும் குண்டு போட்டு உருக்குலைத்தனர்.."
"அருகே வந்து தரை யிறங்கிய ஒரு ஹெலி காப்டர்.. அதிலிருந்து வெளியேறியது ஒரு வன்முறை கும்பல்."


"நன்கு பயிற்சி பெற்ற குழு போலும்! நொடியில் வாகனை தகர்த்து பெட்டியை கைப்பற்றினர்.."
WEST R.R.
"சற்றைக்கெல்லாம் பெட்டியோடு ஹெலி காப்டரில் ஏறிக் கொண்டு பறந்து விட்டனர்.."
"அவர்களை தடுத்து நிறுத்த முயன்றேன்."
டுமீல்
டெக்ஸ்டர் தொடர்ந்தார் -
"ஓரிரு தோட்டாக்கள் அந்த ஹெலிகாப்டரில் காயத்தை ஏற்படுத் தின.. பெட்ரோல் கசிந்து ஒழுகுவதை காண முடிந்தது.."
"திரும்பி வந்தார்கள். அந்த பிராந்தியத்தை உண்டு இல்லை என்றாக் கினார்கள்.. கார்டை தீர்த்துக் கட்டினார்கள்.. என்னையும் பலமாக தாக்கினார்கள் - மயங்கி வீழ்ந்தேன்!"


"எழுந்து நடமாட பல மாதங்கள் பிடித்தன.."
"நான் பூரண குணமடைந்து பணிக்கு திரும்புவதற்குள் க்ரோக்கர் தற்கொலை செய்து கொண்டுவிட்டார்.
வழக்கை முடிவு கட்டி விட்டனர்.. இரண்டாவது உலக மகா யுத்தம் தொடங்கியது.."
காலப் போக்கில் மக்கள் க்ரோக்கரின் மரணத்தை மறந்து போயினர். அப்போது கேபிள் இள வ்யதினன். 50 ஆண்டு இடைவெளிக்குப் பின் அந்தப் பிரச்னை மீண்டும் பூதாகரமாக உருவாகியிருக் கிறது.
அதுதான் ஏனென்று கண்டு பிடிக்க வேண்டும்!
நிச்சயமாக! அது பிறகு கண்டு பிடிக்கப்படவே யில்லை! ஹெலி காப்டரை சேதப் படுத்தினேன் என்று சொன்னேனில்லையா.. அது தறிகெட்டுப் பறந்து உயர மிழந்து பாலை வனப் பகுதியில் நுழைவதை கண்டேன்.
இப்போதைய ப்ளாக் மெயிலுக்கு அந்த டிரங்க் பெட்டிதான் மூல காரணம் பில்!
அது இன்னமும் எங்கோ பத்திரமாக இருக்கிறது என்று நம்பு கிறீர்களா.. டாடி?
கட கடட்



சில ஆண்டுகளுக்குப் பின் அந்த ஹெலி காப்டரை கண்டு பிடித் தனர்..
அதிக சேத மடையாத அந்த ஹெலிகாப்டரில் இருந்தவர்கள் வெளியேறி ஊர் போய்ச் சேர முயன்று, முடியாமல் உயிரை விட்டிருக்கிறார்கள்!
அந்தப் பெட்டி?
அங்கே இல்லை! - மாயமாக மறைந்து விட்டது
" ஆனல் அங்கே ஒளித்து வைக்க இடமே கிடையாது.."
அந்த ஹெலி காப்டரை கண்டுபிடித் தவர்கள் யார்?
பழங்குடி மக்களை ஆராயப் போன புதை பொருள் ஆராய்ச்சிக் குழுவினர்!
அந்த பிராந்தி யத்தை நன்கு தெரிந்தவர்கள் யாரேனும் உண்டா?
செவ்விந்தியர்கள் யாருக்கேனும் தெரிந் திருக்கலாம்.. அப் பகுதியை புனித பூமி என்று கருதுகிறார்கள் செவ்விந்தியர்கள்.



அடுத்து என்ன செய்ய உத்தேசம்.. பில்?
முதலில் என் நண்பன் ஒருவனுக்கு போன் செய்யப் போகிறேன்.
ஹலோ.. மார்லிஞ..? பிலிப் காரிகன் பேசுகிறேன்!
..பார்த்து நாளாகி விட்டது - இல்லையா?
சரி... லான்ஸ் இருக்கிறாஞ?
✱முந்தையதொரு கேஸ் விவகாரத்தில் நண்பன் ஆனவன்.
..ஆமாம் - எனக்குத் தேவை அதுதான் - அதுவும் உடனடியாக.. உதவ முடியுமா?
வித்தியாசமான கோரிக்கை..! ஓ.கே. ஒன்றுக்கு இரண்டாக அனுப்பி வைக்கிறேன்!
வீட்டில் -
டிரங்க்கை கண்டு பிடித்து விட முடியும் என்று நீ நம்பு கிறாயா?
இன்னமும் யாரும் அதை கண்டு பிடித்து மீட்கவில்லை எனில் அது அங்கேதானே இருக்க வேண்டும்!
இதை தவிர வேறு சாலை கிடையாது இங்கே. காரிகன் வருகிறாஞ என்று பார்த்துக் கொண்டிரு.. நான் போய் தங்குவதற்கு நகரில் ஏதாவது ஏற்பாடு செய்துவிட்டு வருகிறேன்.



ஹெலிகாப்டர் விழுந்த பகுதி..
ஆனால் ஏற்கனவே சல்லடை போட்டு சலித்து விட்டார்கள்!
மீண்டும் ஆராய வேண்டும்!
அந்த பகுதி யின் புகைப் படங்கள் கூட கைவசம் இருக்கின்றன.
வனப்பு மிக்க பிரதேசம்.. ஆனால் வாழத் தகுதியற்றது... ஒளித்து வைக்க மறைவிடமே கிடையாது!
..தலைவலி ஏற்படுத்தும் சங்கதிதான் - ஆனால் நான் வேறு எங்கே போவேன்?
யரரோ வருகிறார்கள்.. மனித நடமாட்டமே இல்லாமல் போரடித்துப் போய் உட்கார்ந்திருக் கிறேன்.. உல்லாசப் பயணிகளோ?
அந்த தனியார் சாலையை தொடர்ந்து கண்காணித்துக் கொண்டிருந்தான் அப்னர் -
என்றைக்கு கிளம்பு கிறாய்..?
இன்றைக்கே!


தனியாக வா..?
இல்லை.. உதவிக்கு ஆள் வந்து கொண்டிருக் கிறது!
ஸார்.. நீங்கதான் காரிகஞ? லான்ஸ் அனுப்பிச்சார் - எங்களை
ம்ம்.. ஆஞ.. சிறு பிள்ளை களாக இருக் கிறீர்களே!
குழந்தைகள் என்று குறிப்பிடாதவரை சரிதான்..! மூதாதையர் பற்றி நடக்கும் ஆராய்ச் சியில் நாங்களும் ஈடு பட்டிருக்கிறோம்..
என் பெயர் - ஸிப்பி! இவன்.. டோனி!
லான்ஸ் உங்களை அனுப்பி யிருக்கிறான் என்றால் அதில் அர்த்தம் இருக்கும்.. ஓ.கே.!
என்ன செய்யப் போகிறோம்.. ஸார்!
பிரச்னையை விளக்கினார் காரிகன்..
செனட்டர் க்ரோக்கரை காப்பாற்ற நீங்கள் அந்த பெட்டியை கண்டு பிடிக்க வேண்டுமாக்கும்?
அவரை ஏன் காப்பாற்ற வேண்டும்! அவர் எங்களுக்கு நன்மைகள் ஏதாக்கும் செஞ்சதா தெரியலியே!


உங்களையும் அதாவது FBI ஆட்களையும் சேர்த் துத்தான் சொல்றேன்!
இதற்கு சமாதானம் சொல்ல என்னால் முடியாது டோனி - அது என் கையில் இல்லை.
நீங்க நல்லவர்னு லான்ஸ் சொன்னார் - அது போதும்..! உங்களுக்கு நாங்க ஒத்தாசை பண்றோம்!
அந்தப் பெட்டி பற்றி அங்கே இருக்கும் முதிய வர்களுக்கு ஏதேனும் தெரிந்திருக்கலாம்.
ஒவ்வொருத் தராக விசாரித்து விடலாம்!
அதை சுமந்து வந்த ஹெலி காப்டர் விழுந்தது இந்த இடத்தில்தான்.
அது ஒரு வகையான புனித பூமி.. மிஸ்டர் காரிகன்.
பெட்டி வேறெங்கோ போய்விட்டது என்று தெரிந்தால் புனித பூமியில் காலடி வைக்க மாட்டேன்.. இன்னமும் அங்கேயே இருந்தால் களங்கம் - அப்புறப் படுத்தியாக வேண்டும்.


அப்னரும் செனட்டரும் பின் தொடர்ந்து கொண்டிருந்தனர் -
என்னைத் தேடி வந்த நீ காரிகனை கோட்டை விட்டு விட்டாயே!
இந்த சமவெளிப் பரப்பில் அவனை தேடிப் பிடிப்பது ஒன்றும் கஷ்டமான காரியமேயில்லை.. செனட்டர்!
இந்த முதியவர் பெயர் மார்ட்டின்.. காரிகன்!
லிப்பி அவரோடு உரையாட முடியும்!
அந்த புழுதிப்படலத்தை கவனித்தீர்களா.. செனட்டர்.. காரிகன் அங்கேதான் போய்க் கொண்டிருக்கிறான்.
சீக்கிரம் போ!
காரிகனின் திறமையை நீ குறைவாக மதிப்பீடு செய்யாதே - முட்டாள் பட்டம்தான் மிஞ்சும்
அந்தக் கிழவனிடம் எது பற்றி விசாரிக் கிறார்கள்?
'உலோகப் பறவை' விழுந்தது நினைவுள்ள தாம்.. அது ஒரு சாபக் கேடான சங்கதியாம்.. அதிலிருந்து யாரும் எதையும் மீட்கலையாம்.
இன்னும் நாலு பேரை நாம் சந்திக்கலாம்.. ஆனால் பல மைல் தொலைவு போகணும்!





தொடர்ச்சி 43.ம பக்கம்


இன்ஸ்பெக்டர் டேஞ்சரின் க்ரைம் க்விஸ் _ 6
பிரபல தொழிலதிபர் ஸ்மித் தன் வீட்டு வாசலில் பிணமாகக் கிடக்கிறார்! இந்தக் கொலையை யார் செய்திருக்கக் கூடும்?
சார் - அவரது சொத்துக்கு முன்று பேர் வாரிசு! அவர்களுள் யாராவது ஒருவர்தான் இதைச் செய்திருக்க வேண்டும்!
அம்மணி... ஒரு கொலை நடந்துள்ளது! உங்களைப் போன்ற சின்னப் பொண்ணுகள் இங்கே நிற்பது தப்பு!
நா - நான் கொலை நடப்பதைப் பார்த்தேன் சார்.
காரில் ஹாயாக சவாரி செய்து கொண்டிருந்தேன்..! மிஸ்டர் ஸ்மித்தின் வீட்டைக் கடந்து சென்ற போது..
...யாரோ ஒரு பாவி மிஸ்டர் ஸ்மித்தை குத்திக் கொலை பண்ணுவதை என் கார் கண்ணாடியில் பார்க்க முடிந்தது! துரதிர்ஷ்டவசமாக கொலைகாரனின் முகத்தை சரியாக பார்க்க முடியவில்லை


அந்தப் பெண் சொல்வதை வைத்துப் பார்க்கும் போது கொலைகாரன் இடது கைப் பழக்கம் கொண்டவன் என்பது புரிகிறது சார்! வாரிசுகளில் யாருக்கு இடது கைப் பழக்கம் உண்டு என்பதைக் கண்டு பிடித்தால் கேஸ் முடிந்து விடும்!
பிரமாதம் ஆல்பி..! நீ எங்கேயோ போயிட்டே..!
வாரிசு நம்பர் - 1
கொலை நடந்த போது நீங்கள் எங்கே - என்ன பண்ணிக் கொண்டிருந்தீர்கள்?
நாள் முழுக்க இங்கே தான் இருந்தேன்! முக்கியமான தபால்கள் நிறைய எழுத வேண்டியிருந்தது!
வாரிசு நம்பர் - 2
அடி சக்கை!
கடந்த 4 மணி நேரமாக நான் கிதார் பிராக்டிஸ் பண்ணிக் கொண்டிருந்தேன்!
வாரிசு நம்பர் - 3
போச்சுடா சாமி!
சார்... சார்... நாள் முழுக்க நான் வெளியே போகவேயில்லை! ..வீட்டுக்குள்ளேயே உட்கார்ந்து எம்ப்ராய்டரி போட்டுக் கொண்டிருந்தேன்! வெளியே சொல்லி விடாதீர்கள் - மானம் போய் விடும்!
இதென்ன சார் வம்பா போச்சு? வாரிசுகளில் இரண்டு பேருக்கு இடது கைப் பழக்கம் உள்ளதே.. இதில் யார் கொலைகாரன் என்று எப்படிக் கண்டுபிடிப்பது?
ரொம்ப சுலபமான பிரச்சனை ஆல்பி..! கொலைகாரன் யாரென்பதை நான் கண்டுபிடித்து விட்டேன்!
இன்ஸ்பெக்டர் டேஞ்சருக்கு எப்படி தெரியும்? விடை கண்டுபிடித்து அனுப்புங்கள்!


இன்ஸ்பெக்டர்
டேஞ்சரின்
க்ரைம் க்விஸ்_7
பிரபல கிரிமினல் வக்கீலான ஜூலியன் எனது பால்ய சிநேகிதன்! முக்கியமானதொரு விஷயத்தில் என் உதவி தேவை என்று சொல்லியனுப்பியிருக்கிறான்.
தலைவர் உள்ளே இருக்கிறாரா ஸ்வீட்டி...?
உங்களுக்காகத் தான் காத்திருக்கிறார் இன்ஸ்பெக்டர்!
என்ன பிரச்சனை கண்ணா?
எனது க்ளையண்டான கோடீஸ்வரர் பிக்பாடம் சமீபத்தில் இறந்து போனார்! இப்போது அவரது மருமகனும், மருமகளும் வந்திருக்கிறார்கள்! ஆளுக்கொரு உயிலை வைத்துக் கொண்டு 'சொத்து என்னது - உன்னது' என்று தகராறு பண்ணுகிறார்கள்!
மாமா மரணப் படுக்கையில் இருந்த போது சொத்து முழுவதையும் என் பெயருக்கு எழுதி வைத்து ஒரு உயிலை என்னிடம் கொடுத்தார்!
நோ! இவர் பொய் சொல்லுகிறார்! மாமா உயிலைக் கொடுத்தது என்னிடம்தான்! சொத்து எனக்குச் சேர வேண்டியது!



மாமாவுக்கு வயதாகியிருந்ததே தவிர புத்தி சுவாதீனம் போகவில்லை! சொத்து முழுவதையும் இவளிடம் கொடுப்பதற்கு அவரு க்கென்ன பைத்தியமா?
மாமாவுக்கு எப்போதுமே என் மேல் பிரியம் ஜாஸ்தி..! நான்தான் அவரோட செல்லப் பிள்ளை!
கொஞ்ச நேரம் உங்கள் புலம்பல்களை மூட்டை கட்டி வைத்து விட்டு அந்த உயில் களை என்னிடம் காட்டுங்கள்.
சந்தேகமேயில்லை.. இரண்டுமே ஒரே மாதிரியான கவர்கள்.. ஒரே டைப்ரைட்டரில் தான் பெயர்களும் அடிக்கப்பட்டுள்ளன!
Robert
Sylvia
உயிலுமே அதே டைப்ரைட்டரில் அடிக்கப்பட்டதுதான்! என் இடது கையில் இருப்பது சில்வியா கொடுத்தது. வலது கையில் இருப்பது ராபர்டின் உயில்..!
உங்களில் ஒருவர் உயிலை உங்கள் மாமாவின் டைப்ரைட்டரிலேயே அடித்து விட்டு போலிக் கையெழுத் துப் போட்டிருக்கிறீர்கள்! அது யாரென்பது எனக்குத் தெரியும்!
உங்களுக்கும் தெரியுமா? தெரிந்தால் எழுதியனுப்புங்களேன்!

38.ம் பக்கத்தின் தொடர்ச்சி





குறிப்பிட்ட நோக்கத் தோடு போகிற மாதிரி தெரிகிறது அப்.. கோட்டை விட்டுவிடக் கூடாது.
அவர்கள் கிளப்பிவிடும் புழுதிப் படலமே நமக்கு திரையாகும்!
வரைபடம் இருந்தாலும், இவ்வளவு பெரிய பரப்பில் அந்த ஹெலிகாப்டரை தேடுவது ரொம்ப கஷ்டம்தான் - இல்லையா?
ஊஹூம்.. எனக்கும் டோனிக்கும் இந்த பிரதேசம் உள்ளங்கை மாதிரி!
ஆமா.. ஏறத் தாழ இடத்தை நெருங்கி விட்டோம்!
அதோ.. கெடக்கு பாருங்கள்!
அடடே.. உருக் குலையாமல் முழுமையாக இருக்கிறதே!
பெட்டி ஹெலிகாப்டரில் இல்லை என்றுதான் எல்லா அறிக்கைகளும் தெரிவிக்கின்றன.. என்ற போதிலும் தேடும் படலத்தை இதிலிருந்து ஆரம்பிப்பதுதான் சரியாக இருக்கும்!
ஹூம்.. நிஜம்தான் - சுத்தமாக காலி! வேறு எந்த தடயம் கூட இல்லை...
ஸார்... உங்களுடைய பார்வையில் கூர்மை யில்லை! ஒரு சங்கதி வித்தியாசம் இருக்கு - நீங்க கவனிக்கலை!



பிகு பண்ணாமல் சொல் லேண்டா!
ஒரு ஸீட்டு ஒடைஞ் சிருக்கு.. உலோக பிரேமை காணலை!
அதுக்கு என்ன இப்போ?
காரிகன்.. அந்த பைனு குலரை இப்படி கொடுங்க!
ஆங்..! அங்கே இருக்கு!
என்னடா சொல்ற.. நீ?
டிராங்க் அங்கே இருக்கோ இல்லியோ.. தெரியாது! சில இடிபாடுகள் இருக்கு!
தப்பு!
வாஸ்தவம்தான்! ஆனால்.. மேலே போகவே வழியே இல்லை.. அப்படி இருக்க டிரங்கை எப்படி மேலே கொண்டு போயிருக்க முடியும்?



எதையோ கண்டு பிடித்து விட்ட மாதிரி இருக்கிறது அவர் களுடைய நடவடிக்கை!
ஒருவேளை.. நாம பின் தொடர்வது தெரிந்து விட்டதோ?
அப்படியில்லை! ஹெலிகாப்டர் விழுந்த இடத்தில் உள்ள மலை முகட்டை உன்னிப்பாக ஆராய்கிறார்கள்.
அவர்கள் நம்மை கண்டு பிடிக்காதது ஆச்சரியம் தான்.. நாம் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்!
அங்கே எதை பார்த்துவிட்டு துள்ளு கிறாய்.. டோனி?
பாதி உயரத்தில் மூதாதையர்கள் வசித்த குடிசைகள் தெரியது!
பாழடைந்த வசிப்பிடம்..
கற்களா இருக்கு பாருங்க.. அந்த இடத்தை கவனியுங்க
வழக்கமாக படிகள் வரிசையாக வெட்டப் பட்டிக்கும் - ஆனால் அப்படி எதுவும் தென்படவில்லையே!
நான் சொல்றேன் இருக்கு!
தப்பான கணிப்பு - மறுபடியும் பாருங்க..
மேலே போக வழியே இல் லாதபோது..



வரிசையாக குழிகள் ஒரே சீராக மேலே போறது பாருங்க..
ம்ம்.. ஆனால் கையையோ.. காலையோ வைக்கிற அளவுக்கு பெரியதாக இல்லையே!
ஹெலிகாப்டரோட ஸீட் பிரேமை இதோட இணைக்கப் பாருங்க.. புரியும்!
அப்படியும் இருக்குமா.. என்ன?
ஹெலிகாப்டர் சீட்டில் இருந்த டியூப்களைக் கொண்டு நூல் ஏணி போல ஒன்றை உருவாக்கியிருக்க வேண்டும்!
அப்படித்தான்! அத்தோட இன்னொரு விஷயம் இப்ப நாம இங்கே தனியா இல்லை.. தெரியுமோ?
தெரியாமல் என்ன.? வருகிற வழியிலேயே அதை நான் புரிந்து கொண்டு விட்டேன்
ஓ.. ஏற்கனவே தெரியுமா உங்களுக்கு?
அப்படீன்னா.. நீங்க ஏன் கண்டுக்காம இருக்கீங்க?
மொத்த விவகாரமே.. யார் யாரை எதற்காக ப்ளாக் மெயில் செய்கிறார்கள் என்று கண்டறிவதுதான்!
அதற்கான பதில் என்னைத் தேடி வரட்டுமே!
நல்ல ஆளையா.. ஆபத்தான பேர்வழிகள் பின்தொடர்ந்து வர்றாங்கன்னு தெரிஞ்சுமா எங்களை வம்பிலே மாட்ட தீர்மானிச்சீர்?
F.B.I. ஏஜெண்டு கல்லாமே நெஞ்சிலே ஈரமில்லாத ரகம்டா டோனி!


பயப்படாதீர்கள்..! அந்தப் பெட்டியை நான் தேடிப்பிடித்து அதில் என்ன இருக்கிறது என்று கண்டுபிடிக்காத வரை நமக்கு எந்த தீங்கும் வராது!
இங்கே முகாமிட்டு தங்குவோம்.. விடியற் காலையில் வெளிச்சம் பரவுவதற்கு முன் நீங்கள் நைஸாக நழுவி ஊர் போய்ச் சேருங்கள் - ஓ.கே.!
அப்படீன்னா... உங்க பெட்டி அங்கே இருந்தாலும் நீங்க கண்டுபிடிச்சுக்கப் போறதில்லை!
ஏதோ ஒரு தீர்மானத் திற்கு வந்துவிட்ட மாதிரி வெகு இயல்பாக இருக்கிறது அவர்களுடைய நடவடிக்கைகள்
அந்த மலை முகட்டில் ஆர்வம் காட்டுகிறார் கள்.. ஆனால் இரவில் மேலே ஏறுவது சாத்தியமில்லை!
மேலே ஏறுவதா? செங்குத்து மலை மீதா..? - எப்படி?
அதற்காகத் தான் செவ்விந் தியர்களை அழைத்து வந்திருக் கிறான்.
எப்படி ஏற வேண்டும் என்று அவர்களுக்கு தெரியும்!
அங்கே மேலே எதை கண்டு பிடிக்க நினைக்கிறான் காரிகன்?
ப்ளாக் மெயிலர் குறிப்பிட்ட - தன் தந்தையை பலி வாங்கிய சங்கதியை!



அது என்னவாக இருக்கக் கூடும் என்று உங்களால் யூகிக்க முடிகிறதா.. செனட்டர்!
அது என்ன வென்று தெரியும் எனக்கு!
நீங்கள் என்ன சொல் கிறீர்கள்? அது எப்படி உங்களுக்குத் தெரியும்?
அதைப் பற்றி நீ ஏன் அலட்டிக் கொள் கிறாய்? அவர்கள் அதை கைப்பற்றினால் உடனே அவர்கள் மூவரையும் நீ ஒழித்து கட்டுகிறாய். அதில் கவனம் காட்டு - போதும்.
அந்த ஆட்கள் ஆபத்தான பேர்வழிகள் என்பதால் எங்களை போய்விடச் சொல்கிறீர்களா?
ஆமாம்.. F.B.I. க்கு போன் செய்திருக் கிறேன் - உதவிக்கு ஆள் கேட்டு!
நாங்கள் போய் விட்டால் மேலே ஏறி நீங்கள் தேடி வந்த பொருளை கண்டு பிடிக்கவே முடியாதே!
என்னால் முடியும்..! அந்த சூட்சுமம் எனக்கும் தெரியும்
பொய் சொல்றீங்க..? எப்படி ஏறுவீங் களாம்?
சொல்லுங்க
குழாயை துவாரங்களில் ஒன்றையடுத்து ஒன்றாக சொருகி அதைப் பற்றிக் கொண்டு மேலே ஏறி பிறகு மேலிருந்து கயிற்றை கட்டி தொங்க விட்டுக் கொள்ளலாம்!
சமர்த்துதான்! ஆனா.. அதை நீங்க சாதிக்க முடியாதுங் கிறேன்!
ஏன் முடியாது?



அந்த டிரங்கை நீங்கள் கண்டுபிடிப்பதை எதிரிகள் விரும்பலைன்னா நீங்க மேலே ஏறும்போது ரொம்ப சுலபமா சுட்டு வீழ்த்திவிடலாமே!
லிப்பி சொல்றதும் சரி தானே? நான் மேலே ஏறுகிறேன் - நீங்க பாதுகாப்பு கொடுங்க!
நான் டிரங்கை தேடிக் கண்டுபிடித்துவிட்டேன் என்று உறுதியாக தெரியாத வரை என்னை கொல்ல நினைக்க மாட்டார்கள்.
அவங்களை உங்களுக்கு நல்லா தெரிஞ்சிருக்கும் போலிருக்கே.. அப்படீன்னா முதல்லே அரெஸ்ட் பண்ணிட்டு அப்புறமாக பெட்டியை தேட வேண்டியது தானே?
என் டாடியை முடக்கிப் போட்ட கும்பல் அது. இன்றைக்கும் அது அவர்களுக்கு சாத்தியம்..
நம்மை பின் தொடர்ந்து வந்திருக்கிறவங்க கொலைக்கும் அஞ்சாத வங்கன்னா நாம இப்போ போயிட்டு பின்னால் ஒருநாள் நைஸா வரலாமே!
குற்றவாளிகள் யார் என்று கண்டுபிடிக்க வேண்டியதும் அவ!சியம். எனவே, அவர்களை துரத்தி யடிக்கவோ அவர்களிட மிருந்து நான் கழன்று கொள்வதோ பிரச் சனைக்கு தீர்வு ஆகாது!
உயிரை பணயம் வச்சுத்தான் அதை சாதிக் கணுமா?



என்னை அவ்வளவு சுலபமா எமலோகம் அனுப்பி விட முடியாது லிப்பி! அதே சமயம் இந்த தொழிலில் உயிருக்கு உத்தரவாதம் கிடையாதுதான்!
நீங்க மேலே ஏறத்தான் போறீங்கன்னா நாங்களும் இங்கேர்ந்து போகப் போறதில்லை.. கூட இருந்து ஒத்தாசை பண்றோம்!
உங்க துப்பாக்கியை கொடுங்க - உங்களுக்கு பாதுகாப்பு தர்றேன்!
பகலில் காரிகன் மேலே ஏற முயன்றால் கொக்கை சுடுவது போல் சுட்டு வீழ்த்தி விடலாம்!
அப்படியில்லை அப்னர்.. அவன் அப்படி எதைக் கண்டு பிடிக்கிறான் என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அவன் அதை செய்து முடித்ததும் நீ அவனை - அந்த இரு குட்டிச்சாத் தான்களையும்தான். - தீர்த்துக் கட்டிவிடலாம்!
உங்கள் தந்தை இழந்த பெட்டியின் இருப்பி டத்தை காரிகன் கண்டு பிடித்து விடுவான் என்று நம்புகிறீர்களா..?
நிச்சயமாக நம்புகிறேன்
அதை அவன் கண்டு பிடித்ததும் அவனை தீர்த்துக் கட்டிவிட்டு நாம் அதை சொந்த மாக்கிக் கொள்வோம்!
மற்ற எல்லா விஷயத் திலும் என்னை நம்புகிற நீங்கள் உங்கள் தந்தை அந்த பெட்டியில் என்ன தான் வைத்திருந்தார் என்று என்னிடம் சொல்லக் கூடாதா?
அதை தெரிந்து கொள்வது உயிருக்கே ஆபத்தை ஏற்படுத் தலாம் அப்னர் - அதற்கு நீயும் கூட விதிவிலக் கல்ல.. புரிந்து கொள்
இன்னும் என்ன யோசனை?
எங்க மேலே நம்பிக்கை இல்லியா?



ஓ.கே. என் துப்பாக்கி உங்களிடம் இருக் கட்டும். டிரக்கை விட்டு விலகி எங்கேயும் போய் விடாதீர்கள்.. ஆபத்து என்று அறிகுறி தென் பட்டதும் ஓடிப் போய் விடுங்கள்.
சரி.. படுத்து நிம்மதியாக தூங்கு வோமா?
விடியப் போகிறது அப்னர்.. இனியும் தூங்கிக் கொண்டிருந்தால் காரியத்தை கோட்டை விட்டுவிடுவோம்!
எரிச்சலூட்டிய இரவு ஒரு வழியாக கழிந்தது..
இனி அவர்களை கொல் வதன் மூலம் உற்சாகம் தேடிக் கொள்ளலாம்!
லிப்பி, டோனி.. காரியத்தில் இறங்கு வோமா?
ஹீரோத்தனமாக எதையாவது செய்ய நினைக்காதீர்கள்! அந்த கயவர்கள் இங்கே வந்தால் தப்பியோடி
விடுங்கள் - போய் உதவிக்கு ஆள் அனுப்புங்கள்.. அது வரை நான் மேலேயே காத்திருக்கிறேன்!
எத்தனை தடவை ஸார் இதையே திருப்பித் திருப்பி சொல்வீங்க - போங்க ஸார்.. போய் மேலே ஏறுகிற வழியை பாருங்க!
அதை யடுத்து :
லேசான காரிய மில்லை..! எனக்கோ, FBI க்கோ நான் இழுக்கைத் தேடிக் கொண்டு விடலாகாது!
அப்படியே யாரும் கேலியாக சிரித்தால் நிச்சயம் என் காதில் விழப் போவ தில்லை!
கைகளை மாற்றி மாற்றி கடும் பிரயத்தனம் செய்து மேலேறினார் காரிகன்... ஒரு பிழை நேர்ந்தாலும் போதும் - மன்னிப்பே இருக்காது!



செனட்டர்.. குறி - கச்சிதம்! உங்களுடைய டிரங்கை மறந்துவிட்டு, இப்போது அவன் எப்படி 'டைவ்' அடிக்கப் போகிறான் என்று பாருங்களேன்!
அப்னர் உனக்கென்ன பைத்தியமா..? துப் பாக்கியை இறக்கப் போகிறாயா.. இல்லை உன்னை நான் சுட்டு வீழ்த்தவா?
ஹே.. பாஸ் - வே.. வேண்டாம்.. சுட்டு விடாதீர்கள்! நீங்கள் சொல்லும் போதுதான் காரிகனை இனி குறி வைப்பேன்!
பிழைத்துக் கொண்டாய் சரி வா.. போகலாம்!
டோனி.. அவர் படுகிற அவஸ்தை.. எ..எனக்கு..
குலை நடுக்கம் எடுக்கிற தாக்கும்? சொல்றதை விட செய்யறது எவ் வளவு கஷ்டம்னு இப் போதான் தெரியுது!
ஓ.கே.. பையா. துப்பாக் கியை அப்படியே கீழே போடு - அப்னர்.. இந்த பெண்ணை கவனி
ஓ.கே.. செனட்டர்!
ஐயோ.. நாம் கோட்டை விட்டுட்டோம் - அவரை நம்பிக்கை மோசம் பண்ணிட்டோம்!
அட..! இவர் செனட்டர் அல்லவா?
கேட்டாயா.. இவள் உளறுவதை! இவளை பேச விட்டால் நம் தலைக்கே ஆபத்து வந்து சேரும்!


அப்பாடா.. ஒரு வழியாக சாதித்து விட்டேன்..
அந்த குழந்தைகள்.. அட... அங்கே -
கடவுளே..!
செய்வ தறியாது திகைத்தார் காரிகன்..
கட்டிப்போடு இவர் களை..! இவர்களை பிணையாக வைத்துக் கொண்டு காரிகனோடு பேரம் பேசலாம்!
இவர்களை கொன்று விடலாம் என்று சொன்னீர் களே?
அந்த டிரங்க் அங்கே இருந்தால் அதையும் நான் தேடி எடுத்து தருகிறேன்
அப்னர் நீ இங்கேயே இரு! டாடியின் காணா மல் போன டிரங்க் மீது நீ கை வைப்பதை நான் விரும்பவில்லை!
நீங்கள் போடும் இந்த தடையே என் ஆவலை மேலும் தூண்டி விடுகிறது.
சொன்னால் கேள் - இல் லையேல்..
சுடப்போகிறீர்களா..? என்னையா..? வேண்டாம்.. காரிகனின் துப்பாக்கியை வைத்துக் கொண்டு அந்த ரைபிளை கொடுங்கள்.
துளையில் நுழைந்து மேலே ஏற ரைபிள்தான் வாகான கைப்பிடியாக இருக்கும்!


நான் நினைத்ததைவிட சிக்கலாகிவிட்டதே.. விவகாரம்! சரி.. நெருங்கி வரட்டும் - கவனிக்கிறேன்!
வாடாப்பா.. அன்றைக்கு நீ கொடுத் ததை இப்போது வட்டியும் முதலுமாக திருப்பிக் கொடுக்கப் போகிறேன்..!
என்னை நீ இம்சித்தால் கீழே அந்தப் பிள்ளை களை க்ரோக்கர் கொன்று விடுவார் - வசதி எப்படி?
இல்லா விட்டால் மட்டும் விட்டு விடுவாரா.. என்ன?
அப்படி நம்பு - வேறு வழி?.. சரி - கைகொடு!
வந்து தொலை..!
நன்றி.. முட்டாளே!
கடைசி பிரார்த் தனையை சொல்லிக் கொள்!
அதற்கு இன்னமும் நேரம் வர வில்லையடா!


விழிப்போடு இருக்கிறாயா என்று சும்மா டெஸ்ட் பண்ணிப் பார்த்தேன்.. இல்லையேல், நான் உன்னை சுட்டிருக்கலாமே
இந்த துப் பாக்கிகளை வைத்தா.. ஹா..ஹா. !
சரி..நாம் இருவரும் எப்படியோ இப்போது இங்கே வந்து விட்டோம்! அடுத்து என்ன செய்யலாம் - சொல்!
உனக்கு வேண்டிய பெட்டியை இருவரும் தேடுவோம்!
நான் கண்டு பிடித்தால் உனக்குச் சொல்ல மாட்டேன்!
என் உதவி உனக்கு தேவைப்படும் - மறந்து விடாதே
ஓ.கே.. சரி - நான் இந்தப் பக்கமாக போகிறேன்!
பேய் பிசாசு நடமாட்டம் இருக்கலாம் - ஜாக்கிரதை!
என் கையிலுள்ள துப்பாக்கியை பறிக்க வேண்டும் என்று ஏதாவது முட்டாள் திட்டம் போடாதீர்கள்!
ஹே.. அப்..?
அங்கிருப் பவர்களுக்கு உங்களுடைய அழைப்பு கேட்காது செனட்டர்!


என் துப்பாக்கிகளை பறிக்க முயற்சிக்காதே.. காரிகன்!
அர்த்தமற்ற பேச்சு - அந்தத் துப்பாக்கிகள்
மீது நான் ஏன் அக்கறை காட்ட வேண்டும்?
துப்பாக்கிகள் பற்றிய உன் ஞானம் இவ்வளவு தானா - பூ..!
பெட்டியை தேடும் போது இரண்டு துப்பாக்கிகளை தூக்கிக் கொண்டு அலைவது கஷ்டமாக இருக்கிறது.. எனவே, ஒன்றை காலி பண்ணி கீழே போடப்
போகிறேன்.. என் மீது நீ பாய முயன்றால் தோட்டா நிரப்பப்பட்டிருப்பதை பிரயோகிப்பேன்.
உன் மூளையை சிதறடிக்க எப்படி பயன்படுத்த வேண்டும் என்றவரை ஞானம் இருக்கிறது.. ஆனால் உன்னை வீழ்த்த என் கால்களே போதும் - ..புரிகிறதல்லவா நான் சொல்வது.
அதற்குள் பழையதை மறந்து விடுவேனா என்ன.. சரி.. முதலில் காரியத்தை கவனிப்போமா..?
நீ அந்தப் பக்கம் போகப் போவதாக சொன்னாயல்லவா?
ஆமாம்.. நீ வேறு திசையில் போய் தேடு!
பேய் பிசாசு என்று சும்மா அவனை கலவரமடையச் செய்வதற்காக சொன்னேன்.. ஆனால் இங்கே நிலவரத்தைப்
பார்த்தால் உண்மையிலேயே...
என்ன ஆயிற்று... அவனுக்கு?
ஆ ஆஆ...
ஏய்.. ஏன் அப்படி அலறினாய்?


நீ.. நீ.. நீயே.. வ..வந்து இதை பார்!
செவ்விந்தியர் களின் மயானமா..?
சடங்கு, சம்பிர தாயங்கள் இனத்துக்கு இனம் வேறு படுகிறது..
ஆனால் இவை செவ்விந்தியர் களுடையவை அல்ல
பின்னே?
கடத்தல் கும்பலை சேர்ந் தவர்களாக இருக்கக் கூடும்.. பொக்கிஷங் களை பாதுகாக்க கடற் கொள்ளையர்கள் தங்களில் சிலரை
விட்டுச் செல்வது போல் இங்கே விட்டுச் செல்லப் பட்டவர்களாக இருக்கலாம்.. பெட்டி அப்படியானால் இங்கேதான் இருக்கும்!
அங்கேயே நில் காரிகன்.. நான் போய் பார்க்கிறேன்
மேலே ஏறி வர நீ பயன் படுத்திய அந்தத் துப் பாக்கியை வைத்து சுட நினைக்கிறாயே.. உனக் கென்ன மறை கழன்று விட்டதா?



எனக்கு நீ ஒன்றும் புத்தி மதி சொல்லத் தேவை யில்லை... அங்கேயே நில்.. அவ்வளவுதான் சொல்வேன்.
அதை தொடர்ந்து -
காரிகன் நீ சொன்னது சரி யாகிவிட்டது.. பெட்டி இங்கே தான் இருக் கிறது!
பெட்டியி லிருந்த பூட்டை உடைத்துத் திறக்க முயன் றான் அப்னர்..
உள்ளே என்ன தான் இருக் கிறதோ..! ஆவலை என்னால் அடக்க முடியவில்லை
க்ராக்
வாவ்வ்..!
பணம் .. இது என்ன - பத்திரங்கள்?
அப்.. அங்கே என்னதான் செய்து கொண் டிருக்கிறாய்?
அப்னர்.. என்ன சப்தத்தையே காணோம்..?
வா.. வந்து பார்.. நாலு தலைமுறைக்கு போதும் - அத்தோடு போனஸாக இன்னொன்றும் கிடைத்திருக்கிறது.


ரவுடிக் கிழவன் கழுத்தில் இது சுருக்குக் கயிறாக விழப் போகிறது!
இனியும் அந்த ஆளை கலவரப்படுத்த நான் புளுகிக் கொண்டு திரிய வேண்டியதில்லை!
அப்படி யானால்.. அந்த ப்ளாக் மெயிலர்.. நீதானா?
இப்போதாவது தெரிந்து கொண்டாயே! அவனுடைய இஷ்டத்திற்கு என்னென்னவோ பாவ காரியங்களை எல்லாம் செய்தேன் - ஆனால் நாய்க் ரொட்டித் துண்டு போடுவது போலத்தான் எனக்கு பணம் தந்தான்...
..இனி - கறந்து விடுவேன்!
அப்படி என்ன தான் கிடைத் திருக்கிறது உனக்கு!
சான்று! தேசத் துரோகி கேபிள் க்ரோக்கர்தானே அன்றி அவனுடைய தந்தை அல்ல என்று நிரூபிக்கும் சான்று!
நீ - நீ என்ன சொல் கிறாய்? இரண்டாவது உலக யுத்தத்தின்போது தேசத் துரோகச் செயல் களைச் செய்தது கேபிள் க்ரோக்கரா? அப்போது அவருக்கு 16 அல்லது 17 வயது தானே இருந்திருக்கும்?
க்ரோக்கர் கேபிள்.. நாசவேலை கும்பல் தலைவன்.. ஒற்றர் குழு ஒருங்கிணைப்பாளன் என்றெல்லாம் குறிப்பிடப் பட்டிருக்கிறது இதில்.
கொலை யாளியும் கூட. என்றாகிறது - அல்லவா?
ம்ம்.. இதில் அப்படி சொல்லப்பட வில்லையே!
தன் குற்றங்களுக்கான பழியை தந்தை மீது விழும்படியாக சூழ் நிலையை உருவாக்கி அவர் தற்கொலை செய்து கொள்ளத் தூண்டியதை வைத்து சொல்கிறேன்.
ஆமாம்.. ஆமாம்.. அப்படித்தான்!


ஓ.கே.. அப்! தனக்கு எதிரான சான்றுகளை அழித்துவிட கேபிள் துடிக்கிறார் - நாம் பெட்டியை கீழே இறக்கி எடுத்துச் செல்வோம்!
நோ.. நோ.. அதற்கு அவசரம் இல்லை - இப்போது!
இந்தப் பெட்டியை நான் இஷ்டப்பட்ட போது சாவகாசமாக வந்து மீட்டுச் செல்லலாம்.. இப்போது இந்த பத்திரம்தான் என்னை மில்லியனராக்கப் போகிறது..
இனியும் உன்னை உயிரோடு விட்டு வைக்கத் தேவை யில்லை -
குட்பை காரிகன்!
க்ளிக்!
என்ன அகம்பாவம்.. துப்பாக்கியை நான் உயர்த்திய பிறகும் அலட்டிக் கொள்ளாமல் நிற்கிறாயே..
அந்தத் துப்பாக்கியை நீ இயக்க வேண்டும்..
என்பதற் காகத்தான்!
என்ன உளறு கிறாய்?
மேலே நீ ஏறி வர இந்த துப்பாக்கியின் குழலை துளைகளின் உள்ளே செருகிச் செருகி எடுத்தாயல்லவா..
குழலினுள் தூசியும், மண்ணும் அடைத்துக் கொண்டிருக்கும் - விசையை நீ இழுத்தால் நீ சாவது நிச்சயம்!


நான் சொல்வதில் உனக்கு நம்பிக்கை இல்லை என்றால் என்னை குறி வைத்து விசையை இழு.. பார்ப்போம்!
உன்னை வீழ்த்த துப்பாக்கி எதற்கு – முன்பு போலவே என் கால்கள் போதும்!
அதிரடியாக எட்டி உதைத்தான் அப்னர்.. காரிகன் நிலை தடுமாறி மலை முகட்டிலிருந்து கீழே விழச் செய்யும் நோக்கத்தோடு
விஷ்!
இதை நீ கொஞ்சமும் எதிர்பார்க்க மாட்டாய்!
எதிர் பார்த்தேன்.. அதனால்தான் இப்படி விலகிக் கொண்டு விட்டேன்!
உன்னுடைய ஸ்டைல் ஏற்கனவே எனக்கு அறிமுகமாகிவிட்ட தல்லவா.. அதனால் உஷாராகவே இருந்தேன்..
அதுமட்டு மல்ல.. நீ எதிர் பாராத வகையில்
பதிலடி கொடுக்கவும் முடிகிறது!
அப்னரின் காலை பளிச் சென்று பற்றி விசையாக இழுத்து விட்டார் காரிகன்..


அவர் விலகிக் கொண்டு விட, தடுமாறி முன்னால் பாய்ந்த அப்னர் நிலை கொள்ள முடியாமல் இடறி விழுந்து மலை முகட்டிலிருந்து உருண்டான்.
சேர்ந்து இறங்குவோம் என்று நல்ல விதமாகச் சொன்னேன் நீ சம்மதிக்க வில்லை.. ஸாரி - அப்னர்!
அப்னர்..? அட.. கடவுளே?
பயலே..! என்ன காரியம் பண்ணி விட்டாய்!
அடேய்.. ஈவிரக்கமற்ற பாவி.. என்ன காரியம் பண்ணி விட்டாயடா.. சண்டாளா..


..அப்னர் எனக்கு மகன் மாதிரி.. இவனை அநியாயமாக கொன்று விட்ட உன்னை பழி வாங்காமல்விட மாட்டேன்.. இதோ பார்.. -
ஐயோ.. சுடாதீங்க.. செனட்டர்! அந்த துப்பாக்கி மணல்லே விழுந்திச்சு.. உள்ளே மணல் அடைச்சிக் கிட்டிருக்கலாம்.. ஆபத்தாயிடும்!
டூம்!
டோனி.. லிப்பி.. உங்களுக்கு எதுவும் ஆபத் தில்லையே
எங்களுக்கு இல்லைதான்.. ஆனா -
கேபிள் க்ரோக்கர் தான் செத்துப் போயிட்டார்!
தன் வினை தன்னை சுடும் கிறது நிஜமா யிட்டுது!
சரி.. நீங்க ரெண்டு பேரும் மேலே ஏறி வாருங் கள் - இந்த நூலேணி வழியாக!
டிரங்க் இங்கேதான் உள்ளே இருக்கிறது.. சில பத்திரங்களை
மட்டும் அதிலிருந்து அப்னர் வெளியில் எடுத்தான்... மிஞ்சி இருப்பது என்னவென்று போய் பாருங்கள்.



பெட்டியை நீங்கள் பார்க்க வில்லையா.. மிஸ்டர் காரிகன்?
ப்ளாக் மெயில் விவகாரத்தை முடிக்க எனக்கு அது அவசியப் படவில்லை!
பெட்டியை நான் கண்டால், அதில் பணம் இருக்கும் பட்சத்தில் அதை நான் அரசாங்கத் திடம் ஒப்படைத்தாக
வேண்டும்! உங்கள் இனத்தவர் மிகவும் ஏழ்மை நிலையில் இருக்கிறார்கள்.. எனவே -
ஹாய்ய் - லிப்பி..! காரிகன்! பெட்டி நிறைய ஏகப்பட்ட..
டோனி.. மேலே ஒரு வார்த்தை கூட சொல்லாதே
அந்த ப்ளாக் மெயில் விவகாரம் வித்தியாச மான முடிவு கண்டது..
என்ன.. செனட்டர் கேபிளின் வலது கையாக இருந்து வந்த அப்னர்தான் ப்ளாக் மெயிலரா?
ஆமாம்..! சும்மா ரீல் விட்டிருக்கிறான்..! கேபிளின் குற்றமுள்ள நெஞ்சு அதை நிஜம் என்று நம்பிவிட்டிருக் கிறது!
அப்படியிருக் கையில் அவர் ஏன் FBI யின் உதவியை நாடினார்!
தன் பழைய குற்றங்களை நிரூபிக்கும் சான்றுகள் ஏதேனும் இருந்தால் கண்டு பிடிக்க! - அதை கண்டு பிடிப்பவனையும் சான்றுகளையும் அழித்து விடவே பின் தொடர்ந்து வந்திருக்கிறார்.
வினை விதைத்தவன் வினை அறுப் பான் என்றாகி விட்டது.
இத்தனை காலமும் அவர் மூடி மறைத்து வந்த குற்றங்கள் பூதாகர மாக வெளியேறி வித்தி யாசமான முறையில் அவரை பலி வாங்கி விட்டது.



க்ரோக்கர் ஒரு கயவன் என்றால், அவனுடைய பெட்டியில் சட்ட விரோதமான முறையில் இருக்கும்.
டோனி!
ஏய்.. நீ.. க்ரிக்.. ப்ளாக்
நான் காயம்பட்ட அப்னரை அழைத்துக் கொண்டு க்ரோக்கரின் உடலோடு திரும்பிச் செல்கிறேன். நீ டோனி யிடம் பறவைகள், தேனீ மலர்களின் அழகு பற்றி சொல்லிக் கொண்டிரு..
எனக்கு எதுவுமே விளங்க வில்லை..
கேபிள் க்ரோக்கர் நம் நாட்டுக்கு எதிராக சதி செய்தார்.. எதிரணியினர் சட்ட விரோதமான முறையில் கொடுத்த பணம் பெட்டியில் இருக்
கிறது.. ஏற்கனவே இதன் மீது வரி செலுத் தப்பட்டிருக்கலாம்.. அல்லது வரி விதிப்பு அவசியமில்லாத தாகவும் இருக்கலாம்.
காரிகன் அதை பார்த்து விட்டால் அதை அரசு கஜானாவுக்கு கொண்டு போய்ச் சேர்க்க வேண்டிய கடமை இருக்கு!
ஆனா.. இப்போ நாம இதை நம் ஜனங்களுக்கு பயன்படற விதத்தில் ஏதாவது ஒரு டிரஸ்டிலே ஒப்படைச்சிடலாம்!
அருமையான யோசனை!
ஹே! காரிகன்! நீங்களும் சரி, உங்க இலாகாவும்
சரி நான் நெனைச்ச அளவுக்கு மோசமில்லை!
பின்னர் காரிகனின் பெற்றோர் பண்ணை யில் -
பத்திரமாக திரும்பி வந்து விட்டாயா..? அப்பாடா..
ஈட்டிய வெற்றிக்கு உனக்கு நன்றி சொல்ல யாருமே இல்லை பார்த்தாயா?




முற்றும்


பிரகாஷ் பப்ளிஷர்ஸ் சார்பாக லயன் காமிக்ஸ் மாத இதழை அச்சிடுபவரும் வெளியிடுபவரும், ஆசிரியரும் - S. விஜயன், முகவரி : பிரகாஷ் பப்ளிஷர்ஸ், தபால் பெட்டி எண் : 374, சிவகாசி -626 123. போன் : 20649

அச்சிட்டோர் : தி விஜய் புக்ஸ், சிவகாசி - 626 123.

வெளியீடு எண் : 17

# க்ரைம் க்விஸ் (4) & (5)

வாசக நண்பர்களே,

''வேங்கை வேட்டை'' இதழின் நடுப்பக்கத்தில் வெளிவந்திருந்த **இன்ஸ்பெக்டர் டேஞ்சரின் க்ரைம் க்விஸ் (4) & (5)** க்கான விடைகள் வழக்கம் போல் வந்து குவிந்து கொண்டுள்ளன. அதே சமயம் சில புகார் கடிதங்களும் வந்துள்ளன!

சில ஊர்களில் பிரதிகள் தாமதமாக விற்பனைக்கு வருவதால் போட்டியின் கடைசித் தேதிக்குள் அந்த ஊர் வாசகர்களால் விடையை அனுப்ப முடியாமல் போகிறது! ஆகையால் இனி மேற்கொண்டு விடைகளை அனுப்பிட கூடுதல் அவகாசம் தரப்படும்!

க்ரைம் க்விஸ் (4) & (5) க்கான சரியான விடையும், வெற்றி பெற்ற அதிர்ஷ்டசாலிகள் பற்றிய விபரமும் அடுத்த இதழில் இடம்பெறும்! இம்மாத இதழில் வந்திருக்கும் க்ரைம் க்விஸ் (6) & (7) க்கான விடை அனுப்பக் கடைசித் தேதி :**20-4-94.**

- ***ஆசிரியர்***



## க்ரைம் க்விஸ் (6) & (7)
## விடை அனுப்ப வேண்டிய கூப்பன்

**க்ரைம் க்விஸ் (6) & (7)**
C/o. பிரகாஷ் பப்ளிஷர்ஸ்
த. பெ. எண். 374,
சிவகாசி - 626 123.

சரியான விடைகளை ஒரு போஸ்ட்கார்டில் எழுதி மேலேயுள்ள கூப்பனை, வெட்டி ஒட்டி அனுப்புங்கள்! கூப்பன் இல்லாது அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்க்கப்பட மாட்டாது.

**விடைகள் அனுப்பக் கடைசித் தேதி : 20-4-94**




# லயன் சென்சுவரி ஸ்பெஷல்!!

லயன் காமிக்ஸ்

மறக்க முடியாததொரு
காமிக்ஸ் களஞ்சியமாக
மலரயிருக்கிறது...!

டெக்ஸ் வில்லர்
லக்கி லூக்
ஜேம்ஸ் பாண்ட் 007
சி.ஐ.டி. ஜானி நீரோ
ஸ்பைடர்
அதிரடி ஆர்ச்சி
சூப்பர் ரிப்போர்டர் ஜானி

ஆகியோர்து அதிரடி
சாகஸங்கள் நிறைந்த
300 பக்க
காமிக்ஸ் புதையல்!

**விலை ரூ. 20/-**

அன்புள்ள விற்பனையாளருக்கு,

ரூ. 20/- விலையில் பிரம்மாண்டமாக வரயிருக்கும் ''லயன் சென்சுவரி ஸ்பெஷல்'' எனக்குக் கட்டாயம் தேவை. எனக்காக ஒரு பிரதியை முன்பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். மே 1ம் தேதி பணம் செலுத்தி பெற்றுக் கொள்கிறேன்! நன்றி.

முகவரி : ______________________

______________________

______________________

______________________

அன்புள்ள வாசகர்,

(கையெழுத்து)

**Statement about ownership of**
**LION COMICS (Tamil)**
**Rule 8 (Form IV)**

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | 8/D-5, Chairman P.K.S.A.A. Road, Sivakasi - 626 123. |
| 2. Periodicity of publication | : | Monthly |
| 3. Printer's Name | : | S. Vijayan |
| Nationality | : | Indian |
| Address | : | The Vijay Books 8/D-5, Chairman P.K.S.A.A. Road, Sivakasi - 626 123. |
| 4. Publisher's Name | : | S. Vijayan |
| Nationality | : | Indian |
| Address | : | 288-A, National Colony, Sivakasi. |
| 5. Editor's Name | : | S. Vijayan |
| Nationality | : | Indian |
| Address | : | 288-A, National Colony, Sivakasi. |
| 6. Name and address of Individual who own the paper | : | i) S. Vijayan<br>ii) S. Prakash Kumaran (Minor)<br>iii) M. S. Sathiaprabha<br>iv) S. V. A. Kandaswamy Nadar |

I, S. Vijayan hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Sivakasi
Date: 1-3-'94

S/d. S. Vijayan
Signature of Publisher

## வாசகர் கடிதம்

● **L வெங்கடேஸ்வரன், அய்யம்பாளையம்.**

''**வேங்கை வேட்டை**'' இதழைக் கண்டவுடன் எனக்கு பழைய நினைவுகள் எழுந்தன. ஆசிரியரின் ஹாட்-லைன்; இரட்டிப்பு க்ரைம் க்விஸ்; ஓவியப் போட்டி; முந்தைய வெளியீடுகளை பற்றிய அறிவிப்பு; 100வது இதழின் கதைச் சுருக்கம்; போட்டி கூப்பன்; பின்னட்டை விளம்பரம் என பல்வேறு பகுதிகளை தாங்கி பழைய கம்பீரத்துடன் வருகிறது! இதே போன்று இனியும் தொடருங்கள்! Mr. ரேம்போவையும், ஜார்ஜ் நோலனையும் மீண்டும் அளித்ததற்கு பாராட்டுக்கள்.



● **பா. துரை பிரசன்னா, சிவகாசி.**

அன்றோர் அதிசயம் - நான் பாடம் படிக்கிறேன்! படிக்காமலிருக்கும் நான் பாடம் படிக்கிறேன்! விடிய விடிய நான் பாடம் படிக்கிறேன். அட - படிக்கும் புத்தகத்துக்குள் லயன் காமிக்ஸ்!

● **K. செக்கிழான், கரூர்.**

''**வேங்கை வேட்டை**'' கதை செம காமெடி! போலி ராஜாவை ரிப்பும், டெஸ்மாண்டும், கிழட்டுப் புலியின் துணையோடு ஓட ஓட விரட்டுவது சூப்பர்! க்ரைம் க்விஸ் இரண்டு மடங்காக்கியதற்கு நன்றி!





● **பாரதி நந்தீஸ்வரன், குமாரபாளையம்.**

யுத்த பூமியில் எக்கச்சக்கமாய் மாட்டிக் கொண்டு வீர சாகஸங்கள் செய்த உணர்வை ஏற்படுத்தியது - ''முகமில்லா மாயாவி'' கதை! நார்மன் கதை எப்போது வரும்?

● **த. கணேஷ், சேலம் - 2.**

லயனின் 100வது இதழை பிரமாதமாக கலரில்தான் வெளியிட வேண்டுமென்று அன்புக் கட்டளை இடுகிறேன்!



● **மண்ணடி எஸ். பாலாஜி, சென்னை - 1.**

''முகமில்லா மாயாவி'' படக்கதை, சென்சுவரி ஸ்பெஷலில் என்னென்ன ஸ்பெஷல் அம்சங்கள் என்ற அறிவிப்பு - நுணுக்கமான ''க்ரைம் க்விஸ்'' - நல்ல அச்சு.. அம்மாடி யோவ் - ஏக அமர்க்களப்படுத்தி விட்டீர்கள்!

# "மாதம் ஒரு வாசகர்"

வாசகர் பெயர் : ______________ வயது : ______

முகவரி : ______________

______________

கல்வித் தகுதி : ______________

பொழுது போக்குகள் : ______________

______________

லயன் காமிக்ஸ் படிப்பது எத்தனை காலமாய்? : ______________

______________

லயன் காமிக்ஸ் அறிமுகமானது எப்படி? ______________

______________

நீங்கள் படிக்கும் இதர பத்திரிக்கைகள் என்ன? : ______________

______________

இதுவரை வந்த லயன் காமிக்ஸ் கதைகளில் நீங்கள் மிகவும் ரசித்துப் படித்தது எந்தக் கதை? ______________

உங்களைத் தவிர வேறு யாரும் வீட்டில் லயன் காமிக்ஸ் படிக்கிறார்களா? ______________

படித்து முடித்த பின் இதழை என்ன செய்வீர்கள்? : ______________

______________

# புக் - மார்கெட்

## தேவை!

1. கத்தி முனையில் மாடஸ்டி
2. மரணக் கோட்டை
3. மர்ம எதிரி
4. மாடஸ்டி in இஸ்தான்புல்
5. பழி வாங்கும் பாவை
6. பயங்கர நாடகம்
7. கடத்தல் வலை

**திகில் :**

8. சைத்தான் துறைமுகம்
9. பற்றி எரியும் பாலைவனம்

இவற்றை வாங்கத் தயாராக இருக்கும் வாசகர் :

**R. அன்பழகன்** B.Sc., B.Ed., D.T.E.,
கொளத்துப் பாளையம்
பாண்டியம்பாளையம்
(P.O.) - 638 455
கவுந்தப்பாடி (Via)

## விற்பனைக்கு

1. அதிரடி வீரர் ஹெர்குலஸ்
2. கல் நெஞ்சன்
3. கானகத்தில் கண்ணாமூச்சி
4. ஒரு பனிமலை பயங்கரம்

## தேவை

1. பவளச் சிலை மர்மம்
2. காணாமல் போன கடல்
3. சிறு பிள்ளை விளையாட்டு
4. திக்குத் தெரியாத தீவில்

தொடர்பு கொள்க :

**A. கலீல் (ஜமீலா பீவி)**
அக்பர் வீதி,
புறாத் தோப்பு,
கோட்டக்குப்பம்.

## விற்பனைக்கு!

**லயன்**

1. கடத்தல் வலை
2. கல்நெஞ்சன்
3. மீண்டும் ஹிட்லர்

**திகில்**

4. காணாமல் போன கழுகு

**மினி லயன்**

5. விண்வெளியில் ஒரு எலி

தொடர்பு கொள்க :

**R. ரஞ்சித்,**
171, காந்தி ரோடு,
திருப்பெருமந்தூர் **P.O. - 602 105.**

# கதை சுருக்கம்



## • டெக்ஸ் வில்லர் தோன்றும் ''பலி கேட்ட புலிகள்''

பாலைவனத்தில் புதிரான சின்னம் கொண்டதொரு மரத்தை டெக்ஸ் வில்லர் பார்க்கிறார். அந்தப் பகுதியில் வாழும் செவ்விந்தியப் பழங்குடியினரை விசாரிக்கும் போது பாலைவனத்தில் ஒரு கொடியவனின் ராஜ்யம் கொடி கட்டிப் பறப்பது புலனாகிறது! அந்தக் கயவனின் கைவசமோ ஒரு விசித்திரக் கொலைப்படை உள்ளது - ஆமாம்... எதிரிகளை சின்னா பின்னமாக்க வெறிபிடித்த புலிகளைப் பழக்கி வைத்திருக்கிறான்! அந்தக் கொடியவனின் திட்டம்தான் என்ன... **பலி கேட்ட புலிகளுக்குப்** பதிலென்ன...? டெக்ஸ் வில்லரின் இந்த 120 பக்க முழு நீள சாகஸம் உங்களை மெய்மறக்கச் செய்யும்!



## • லக்கி லூக் தோன்றும் ''ஒரு பியானோவின் கதை''

இந்தக் கதை கூட பாலைவனத்தில்தான் தொடங்குகிறது... ஆனால் முடிவதற்குள் உங்கள் வயிற்றைப் புண்ணாக்கிவிடும்! ஆமாம் - காமெடி கௌ-பாய் **லக்கி லூக்** வந்துவிட்டால் சிரிப்புக்குப் பஞ்சமேது? பாலைவனத்தில் ஒரு பியானோவுடன் அப்பாவி ஆசாமி ஒருவன் செவ்விந்தியர்களிடம் சிக்கிக் கிடப்பதை லக்கி லூக் காண்கிறார்! அவனையும், அவனது இசைக் கருவியையும் காப்பாற்ற லக்கியும், ஜாலி ஜம்பரும் படும் கஷ்டங்கள் ஏராளம்! முடிவில் என்னாகிறது என்பதை ''**ஒரு பியானோவின் கதை**'' உங்களுக்குச் சொல்லும்! முழு வண்ணத்தில் ஒரு நகைச்சுவை விருந்து!



- **ஸ்பைடர்**

முன்னாள் குற்றச் சக்கரவர்த்தியின் ஆதிக்கத்திற்கு சவால் விட புதிதாக முளைக்கும் வில்லன் **''மிஸ்டர் மான்ஸ்டர்!''** இவனை ஸ்பைடர் அடியோடு அழிக்கும் சாகஸத்தை **சூப்பர் ஹீரோ ஸ்பைடரில்** படிக்கலாம்!



- **சூப்பர் ரிப்போர்டர் ஜானி தோன்றும்**

**''காற்றில் கரைந்த கொலையாளி!''**

ரிப்போர்டர் ஜானியும், கமிஷனரும் தங்கள் கண்முன்னே ஒரு கொலையைப் பார்க்க நேரிடுகின்றது! ஆனல் கொலையாளியோ அந்தக் கணமே காணாமல் போய்விடுகிறான்! தடயமே இல்லாத குற்றம்... ஆவியாய் மறைந்த குற்றவாளி! ரிப்போர்டர் ஜானியின் மிக மிக வித்தியாசமான கேஸ் இது! விறுவிறுப்பான 16 பக்க மினி த்ரில்லர்!



- **அதிரடி ஆர்ச்சி**

ஆர்ச்சியும், நண்பர் குழுவும் ஆர்டிக் வட துருவத்திற்குச் செல்ல நேரிடுகிறது! அங்கே அவர்கள் அடிக்கும் லூட்டிகளை இந்த மினி அட்வென்சரில் படித்து மகிழுங்கள்!



● ஜேம்ஸ் பாண்ட் 007 துப்பறியும் ''மரண வியாபாரி''

மத்திய கிழக்கு நாடுகளில் அடிக்கடி கலகங்கள் ஏற்படுகின்றன! வன்முறையின் தன்மையும் பன்மடங்கு அதிகரிக்கின்றது! காரணம் - திருட்டுத்தனமாக அவர்களுக்குக் கிடைக்கும் நவீன ஆயுதங்களே! இங்கிலாந்திலிருந்துதான் ஆயுதங்கள் கடத்தப்படுகின்றன என்பதை **ஜேம்ஸ் பாண்ட் 007** அறியும் போது அந்த **''மரண வியாபாரிகளோடு''** அதிரடி மோதல் ஏற்படுகின்றது! 32 பக்க புத்தகம் புதிய சாகஸம் - டாப் க்ளாஸ் சித்திரங்கள்!



● சி. ஐ. டி. ஜானி நீரோ துப்பறியும் ''பற்றி எரியும் பாரிஸ்''

நூற்றாண்டிற்கு ஒரு முறை உலகைக் கலக்க ஒரு கொடியவன் உருப்பெற்று வருவது சரித்திரம்! போன நூற்றாண்டில் யுத்தப் பிரியன் நெப்போலியன், இந்த நூற்றாண்டில் ஹிட்லர்! பாரிஸில் புதிதாகத் தலைதூக்கும் ஒரு வன்முறைக் கும்பலின் தலைவனே ஹிட்லரின் வாரிசாக முற்படுகிறான்! பாரிஸ் முழுவதையும் முற்றுகையிட்டு உலகையே கலக்கும் இந்த வில்லனை **சி.ஐ.டி. ஜானி நீரோ & ஸ்டெல்லா** முறியடிக்கும் 66 பக்க சாகஸம்தான் **''பற்றி எரியும் பாரிஸ்!''**


மறக்க முடியாததொரு
காமிக்ஸ் பயணத்திற்கு
தயாராகுங்கள்...!
"லயன் சென்சுவரி
ஸ்பெஷல்"
உங்களை ஒரு சாகஸ
உலகிற்கு அழைத்துச்
செல்லக் காத்திருக்கிறது!
லயன்
காமிக்ஸ
முன் பதிவுக் கூப்பன்
ரூ. 20/- விலையில் வரயிருக்கும் பிரம்மாண்டமான "லயன் சென்சுவரி ஸ்பெஷல்" எனக்கு வேண்டும். அதற்காக தபால் கட்டணம் சேர்த்து ரூ. 16/- M.O./D.D. அனுப்பியுள்ளேன்! மே 1 ம் தேதிக்கு எனக்குக் கிடைக்கும்படி புக் அனுப்புங்கள்!
பெயர் :
முகவரி :
பின் கோடு :
முன்பண விபரம் :

# ஸ்ரீலங்கா வாசக நண்பர்கள் கவனத்திற்கு...!



கடல் கடந்த காமிக்ஸ் பிரியர்களே,

நமது இதழ் சற்றே தாமதமாய் உங்கள் நாட்டில் கிடைப்பதால் **''க்ரைம் க்விஸ்''** போன்ற போட்டி களில் நீங்கள் கலந்து கொள்ள முடியாமல் போவது குறித்து எங்களுக்கும் வருத்தமே...! இனி உங்களுக் கும் வாய்ப்பளிக்கும் சில போட்டிகள் நமது லயனில் அவ்வப்போது வெளிவரும்! முதல் போட்டி நமது **''சென்சுவரி ஸ்பெஷலில்''** இடம் பெறுகிறது! அதனால் இப்போதே உங்கள் ஏஜெண்டிடம் உங்கள் பிரதிக்கு பதிவு செய்து கொள்ளுங்கள்.

**- ஆசிரியர்**

***''கத்தி முனையிலிருந்து''*** துவங்கிய நமது காமிக்ஸ் பயணத்தில் கைகோர்த்து வரும் வாசக நண்பர்களே,

## 1 - 100 வது இதழ் வரை வரிசைப்படுத்தி கதைகளின் பெயர்களை எழுதியனுப்ப முடியுமா?

சரியான விடை அனுப்பும் முதல் **நூறு** வாசகர்களுக்கு நமது ''லயன்'' படத் துடன் கூடிய ஒரு **''கீ - செயின்''** பரிசாக அனுப்பப்படும்! ''1 - 50'' வரையிலான வெளியீடுகள் விபரம் ஏற்கனவே **''டிராகன் நகரம்''** (50வது லயன் வெளியீடு) இதழில் வந்துள்ளது!

- ஆசிரியர்.

**இடப் பற்றாக்குறை காரணத்தால் "கதை சொல்லும் படங்கள்" கட்டுரைத் தொடரை இந்த இதழில் துவக்க முடியவில்லை! Sorry! அடுத்த இதழில் இடம் பெறும்!**

வாசக நண்பர்களே,

"முகமில்லா மாயாவி" இதழின் நடுப்பக்கத்தில் இடம்பெற்றிருந்த கேள்விகளுக்கான பதில்களைப் பரிசீலித்து இங்கே வெளியிட்டிருக்கிறோம்! அடுத்த மாத "ஹாட்லைன்" பகுதியில் எனது எண்ணங்களைப் பற்றி எழுதுகிறேன்!

| | | |
|---|---|---|
| 1. எந்த சைஸ் பிடித்திருக்கிறது? | ☐ பாக்கெட் சைஸ் | - 47% |
| | ☐ பெரிய சைஸ் | - 53% |
| 2. ரிப் கிர்பி கதைகளுக்கு உங்கள் சர்டிபிகேட் என்ன? | ☐ வெரிகுட் | - 44% |
| | ☐ சுமார் | - 44% |
| | ☐ போர் | - 12% |
| 3. காரிகன் கதைகள் எப்படி? | ☐ வெரிகுட் | - 60% |
| | ☐ சுமார் | - 34% |
| | ☐ போர் | - 6% |
| 4. டெக்ஸ் வில்லர் கதைகளை 2 பாகமாகப் பிரித்துப் போடலாமா? | ☐ யெஸ் | - 100% |
| | ☐ நோ | - Nil |
| 5. தற்போது உள்ள அட்டைப்பட Standards எப்படி? | ☐ 'பளிச்' ரகம் | - 38% |
| | ☐ இன்னும் கவனம் வேண்டும் | - 62% |
| 6. புக்கை கையில் எடுத்தவுடன் நீங்கள் படிப்பது எதை? | ☐ கதை | - 32% |
| | ☐ ஹாட்-லைன் | - 48% |
| | ☐ க்ரைம்-க்விஸ் | - 13% |
| | ☐ வாசகர் கடிதம் | - 7% |
| | ☐ புக் மார்கெட் | - Nil |
| | ☐ மற்றது | - Nil |
| 7. ராணுவக் கதைகளை அடிக்கடி போடலாமா? | ☐ தாராளமாக | - 69% |
| | ☐ வேண்டவே வேண்டாம் | - 31% |
| 8. கார்டூன் சிறுகதைகள் இன்னும் நிறைய சேர்க்கலாமா? | ☐ யெஸ் | - 100% |
| | ☐ நோ | - Nil |

9. லயனின் ப்ளஸ் பாயிண்ட்ஸ்
   1. நல்ல கதைகள்
   2. தத்ரூபமான படங்கள்
   3. ஹாட்-லைன்
   4. மொழி பெயர்ப்பு தரம்
   5. க்ரைம் க்விஸ்

10. மைனஸ் பாயிண்ட்ஸ்
   1. தாமதம்
   2. சரியாக எல்லா இடங்களிலும் கிடைப்பதில்லை
   3. விலை ஜாஸ்தி
   4. பழைய ஹீரோக்களை மறந்தது
   5. விலையில் அடிக்கடி மாற்றங்கள்

இந்த மாத வாசக ஓவியர்

# ஓவியப்போட்டி!

K. சாரதி,
IX th std. A.
No. 27/5. சத்திய மூர்த்தி நகர்,
தேனாம்பேட்டை,
சென்னை - 18



## வருகிறது!

# லயன் சென்சுவரி ஸ்பெஷல்!

Regd. No.: TN/VR/29 R. N. 49613/87

